REGISTERED 14 OCT 1910 MADRAS.

விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி III } ஸாதாரண௵ ஆவணி௴ 1910-௵ செப்டம்பர்௴ { பகுதி 3

பச்சாத்தாபம்

REPENTANCE

பச்சாத்தாபம் என்பது பின்னர் படும் கஷ்டம் என்றும் பின்புத்தி என்றும் பொருள்படும். ஒருவன் ஓர் பாபத்தைச் செய்துவிட்டுப் பின்னர் 'ஏன் அநியாயமாக இதைச் செய்துவிட்டோம்! செய்யாமலிருந்தால் எவ்வளவு நலமாக இருக்கும்!' என்று படும் பாட்டிற்கே பச்சாத்தாபம் என்று பெயர். உலகத்தில் பொதுவாக விஷயங்களில் ஒருவாறு அடிபட்டே நல்லபுத்தி நமக்கு வரவேண்டி யிருக்கிறது. விஷய ரஹஸ்யங்களை அறிந்து அவைகளைப் பார்த்துணரும் திறனுடையவர்களுக்கு ஒருதரம் பட்டு அதனால் உண்டாகும் பச்சாத்தாபமே போதும்; மறுபடியும் அவர்கள் முன்போல விஷயங்களை அதிகமாக நாடமாட்டார்கள். இக்கருத்தையே 'பார்ப்பாருக்குப் பின்புத்தி,' 'பட்டால் தெரியும் பார்ப்பாருக்கு' என்ற பழமொழிகள் குறிக்கின்றன. பிராஹ்மணர்களுக்கு எப்பொழுதும் பின்புத்திதான்; அவர்களுக்குக் கஷ்டப்பட்டால் தான் தெரியும் என்று இவைகளுக்கு ஸாதாரணமாகப் பொருள்கொண்டு பிராஹ்மணர்கள் தாழ்ந்தவர்கள் என்றெண்ணுவது யுக்திக்குப் பொருந்தாது. 'புத்திக் கூர்மையால் விஷய நிலையாமையை உணரும் திறனுடையவர்கள் ஒருதரம் கஷ்டப்பட்டு விட்டால் பின்னர் உண்மையாகப் பச்சாத்தாபப்பட்டு மனோதிடம் பெறுவர். மற்றைய பாமரர்களுக்கோ அவ்வாறின்றி எவ்வளவு தரம் வருந்தியும் மறுபடியும் நல்லபுத்தி வாராது அவர்கள் வருந்த வேண்டியதுதான் என்பது முற்கூறிய பழமொழிகளின் உண்மைப்பொருள்.

மதாந்தரத்தவர்களில் சிலர், 'நாம் மஹா பாபாத்மாக்கள். நமது பாபத்தைத் தொலைத்துக்கொள்ள நம்மாலாகாது. பகவான் கிருபையாலேயே நமது பாபம் தொலையவேண்டும்' என்று மனப்பூர்வமாகத் தமது தாம்ந்த நிலையை உள்ளவாறு உணர்ந்து பரிதவிப்பதே பச்சாத்தாபம் எனக்கொண்டு, பகவந் நம்பிக்கையால் வரும் கடவுள் கிருபை மூலமாக எளிதில் சித்தஸமாதானம் பெறலாம் என்பர். இது ஸாதாரண ஜனங்களுக்குச் சிறந்த உண்மை என்றே படலாம். இம்மாதிரியான தாபத்திற்குக் கொஞ்சம் நல்ல பலனும் உண்டு. ஆயினும் 'எல்லாம் சிவன் செயல்' என்றிருந்து நல்லகர்மங்கள் அனாவசியம் என்று கண்டித்து, கெட்ட.கர்மங்கள் செய்ய நேருங்கால் சிவார்ப்பணம் செய்து சும்மாவிருக்கும் விபரீத ஞானிகள் நிலை நமக்கு இதனால் வந்துவிடலாம். இது வாராமல் காக்கவேண்டும். பச்சாத்தாபம் துக்கரூபமாயும் நமது தாழ்மையை உணரும் ரூபமுமாயும் மாத்திரம் இருப்பின் இந்தக் கேட்டையே சில காலங்களில் உண்டாக்கும்.

ஊன்றிப் பார்க்குங்கால் பச்சாத்தாபம் என்பது ஓர் வெட்கரூபமாக இருக்கவேண்டுமே ஒழிய துக்கரூபமாக இருக்கவே கூடாது. இந்த வெட்சத்தின் ஸ்வரூபத்தைத் தர்மபுத்திரர் யக்ஷப் பிரச்னத்தில் 'கெட்டகாரியத்தை மறுபடியும் செய்யாமை' என்று வர்ணித்திருக்கிறார். இதை ஒட்டி நோக்குங்கால் பச்சாத்தாபத்தின் ரூபம் விளங்கும். முதலில் விஷயத்தால் உண்டாக்கப்படும் ஓர் மருளுக்கு ஈடுபட்டபின் அது வரவேண்டும். அந்த விஷயம் மஹா துச்சம் என்ற உணர்ச்சியும், தான் இவ்வளவு புத்தியும் சக்தியும் வாய்ந்தவனாகவிருந்தும் அதற்கு ஈடுபடும்படி நேரிட்டதே என்ற வெட்கமும், இனி அதே மாதிரி வந்தால் ஈடுபடுவதேயில்லை என்ற தீர்மானமும் இந்தத் தீர்மானப்படி நடத்தக் கடவுள் எந்தக் கஷ்டஸமயத்திலும் தனக்குப் பலம் தந்தருளவேண்டும் என்ற பிரார்த்தனையுமே இந்தப் பச்சாத்தாபத்தின் முக்கியலக்ஷணங்கள். இம்மாதிரி அடிக்கடி நாம் விஷயங்களின் வாயிற்சிக்கி வருந்தியபின் பச்சாத்தாபத்தில் பழகிவந்தால், நமது ஆத்ம பலத்தின் சிறப்பு மருள் வருவதன்முன் பழக்க விசேஷத்தால் வந்து தோன்ற, நாம் விஷயங்களில் எளிதில் ஈடுபடாது வரவர பரிசுத்தமாகி பகவத் கிருபைக்குப் பூரணமாக ஆளாக முடிவில் முக்தியையே அடைவோம்,

. . .

விவேக போதினி

தொகுதி 3] ஸாதாரணஹு ஆவணிமீ [பகுதி 3

முக்கிய உபநிஷத்துக்கள்

THE PRINCIPAL UPANISHADS

IV. பிரச்னோபநிஷத்து

THE PRASNOPANISHAD

ஆறு பக்குவிகளான சிஷ்யர்கள் பிப்பிலாதர் என்ற மஹானை அடுத்து வேதாந்தவிஷயமாகக்கேட்ட ஆறு கேள்விகளுக்கு, அவர் அளித்த விடைகளை அடக்கி உள்ளதால் இவ்வுபநிஷத்துக்கு பிரச்னோபநிஷத் (அதாவது கேள்விகளடங்கிய உபநிஷத்) என்ற பெயர் வந்தது.

இங்குக் கேட்கப்படும் கேள்விகளை உற்று நோக்கினுல் வேதாந்த விஷயங்கள் முழுவதும் இவைகளில் அடங்கிவிட்டன என்பது வெளியாகும். இவைகளின் விடைகளே இவ்வுபநிஷத்தாக வெளிவந்திருக்கின்றன.

வினு 1.—எங்கிருந்து இப்பிரபஞ்சம் உண்டாயிற்று? (என்று காத்யர்பிள்ளை கபந்தி கேட்டான்.)

விடை.—ஈசுவரனிடமிருந்து அவரது மனோபலத்தாலேயே துவந்துவங்களாகிய அனுபவவஸ்துக்கள், அனுபவிப்பவன் முதலியவைகள் உண்டாயின. இவைகள் பிரபஞ்சத்தில் அநேகவித துவந்துவங்களால் குறிக்கப்படுகின்றன. அவையாவன:ஸூர்ய சந்திரர்கள்; உத்தராயண தக்ஷிணாயனங்கள்; சுக்லபக்ஷ கிருஷ்ணபக்ஷங்கள்; பகல் இரவுகள் ஆகிய இவைகளே. இவைகளில் முதலில் உள்ளவைகள், அனுபவிக்கும் சரப்பிரபஞ்சத்தையும், பின்னவைகள் அனுபவிக்கப்படும் அசரப்பிரபஞ்சத்தையும்குறிக்கின்றன. ஸூர்யனே பேரின்பத்தின் அடையாளம். உத்தராயணம் சுக்லபக்ஷம்,பகல் ஆகிய இவைகளில் ஒருவன் தபஸ்,பிரஹ்மசரியம் இவைகளை முன்னிட்டு இறப்பானுயின் அவன் சிறந்தபதவியை அடைவன். கர்மமார்க்கத்தைப் பின்பற்றி நல்ல வழியில் நிற்பவன் சந்திரபதவியை அடைவான். இவைகளை முன்னிட்டு தக்ஷிணாயனம், கிருஷ்ணபக்ஷம், இரவு இவைகளில் ஒருவன் இறந்தால் அவன் பிதிர்க்கள் பதவியை அடைந்து மறுபடி பிறப்பிறப்பில் அகப்பட்டுக் கொள்ளவேண்டியதுதான் ஆகையால் இதனுல் வரும் பதவி நிலையில்லாதது. பகல் சிறந்த காலமாதலால் அதில் சிற்றின்பங்களில் மூழ்கவேகூடாது. அவ்வாறு செய்தால் அவன் பலமும் ஆயுஸும் குறைந்து வருந்த வேண்டியதுதான். சிற்றின்பங்களை இரவில் ஒழுங்குப்படி அனுபவிப்பவர்கள் பிரஹ்மசாரிகள் எனப்படுவர். இம்மாதிரி பிரஹ்மசரியம்,தபஸ் முதலியவைகள் உடையவர்களே பிரஹ்மலோகம் அடைவர். இங்குப் பொய்பிரட்டு யாதொன்றும் இல்லை.

வினு 2.—ஜந்துக்களைக் காக்கும் தேவதைகள் யார்? அறிவுகொடுப்பவர் யார்? தேவதைகளுள் சிறந்தவர்யார்? (என்றுவிதர்ப்பர் பிள்ளை பார்க்கவன் கேட்டான்.)

விடை 2.—இந்திரிய சக்திகளுக்கு இருப்பிடமாக வெவ்வேறு தேவதைகள் உண்டு. ஓர் காலத்தில் இவைகள் ஒவ்வொன்றும் 'நானே சிறந்தவன்' என்று பெருமைபேசி வந்தன. இதைக்கேட்ட பிராண சக்தியின் தேவதை 'வீணுகப் பெருமை பேசுவதால் பயன் என்ன? நானே ஐந்து ரூபமாக இருந்து தேஹத்தை ஆதரித்து வருகிறேன்' என்றது. மற்ற தேவதைகள் இதை நம்பாதிருந்ததைக் கண்டு பிராணன் மெதுவாக தேகத்தைவிட்டு வெளி ஏறியது. தேனீ அரசு வெளிவருங்கால் மற்றைய ஈக்கள் வெளியே வருவதுபோல் மற்றைய தேவதைகளும் வெளி ஏறிவிட்டன. பிராணன் தேஹத்துள் இறங்கியதும் மற்றை தேவதைகளும் ஒங்கி நின்றன. உடனே இந்திரிய

தேவதைகளுக்குத் தமது குற்றம் தெரிய வர அவைகள் பிராணனைத் துதித்தன. இந்தப்பிராணனே அக்னி ரூபமாக எரிக்கிறது, ஸூர்ய ரூபமாகப் பிரகாசிக்கிறது, மேகரூபமாக மழை பொழிகின்றது. இது உருவுடையதாயும், உருவமில்லாததாயும் உள்ள எல்லாமாகி நிற்பது. இது அம்ருதரூபமாயிருப்பது. சக்ரத்தின் இருசுக்குடத்தில் அதன் குறுக்கு மரத்துண்டுகள் எவ்வாறு தாங்கி நிற்கின்றனவோ, அவ்வாறே எல்லாம் இந்தப் பிராணனிலேயே நிலை பெற்றிருக்கின்றன. இந்தப் பிராணனை எல்லா தேவதைகளும் துதித்து முடிவில் 'எல்லாம் உம்முள்ளேயே அடங்கிக்கிடக்கின்றன. தாய் தன்பிள்ளையைக்காப்பாற்றுவதுபோல எங்களையும் நீங்கள் காத்து இன்பத்தையும், அறிவையும் கொடுத்தருளவேண்டும்' என்று பிரார்த்தித்தன.

(இங்குப் பிராணன் என்று கூறியது பரம் பொருளே என்பது சொல்லாமலே விளங்கும்.)

வினு 3.—பிராணன் என்றால் என்ன? தேஹத்துள் அது எவ்வாறு வந்து, மாறுபாடுகளை அடைகின்றது? அது எவ்வாறு வெளியேறும்? உள்ளும் வெளியும் உள்ளவைகளை எவ்வாறு அது காக்கின்றது? (என்று அச்வலாயனர் பிள்ளை கௌஸல்யன் கேட்டான்.)

விடை 3.—பிராணன் ஆத்மாவிலிருந்து உண்டாகி அதை நிழல்போலப் பரவி மறைக்கின்றது. மனதின் கர்மங்களால் இது தேஹத்துள் புகுந்துவிடுகிறது. ஓர் அரசன் எவ்வாறு தன் கீழதிகாரிகளை அடக்கியாளுகிறானோ, அதுபோல பிராணன் தனது ரூபாந்திரங்களை அடக்கியாண்டு தத்தம் தொழில்களை நடத்திவரும்படி செய்கின்றது. இதன் ஆளுகைக்கு உட்பட்டே பிராணவாயு கண், காது, மூக்கு, நாக்கு இவைகளிலும்; அபான வாயு மலத்வார ஜலத்வாரத்திலும்; வ்யான வாயு 72,000-நரம்புகள் உள்ளும்; உதானவாயு ஸுஷும்னை என்ற நடுநரம்புள்ளும்; பிராண அபானவாயுக்களின் இடையில் ஸமான வாயுவும் ஸஞ்சரிக்கின்றன. உதானவாயுவே கர்மங்களின் ஸ்வபாவங்களுக்கு ஏற்றபடி ஒருவனுக்கு லோகாந்தரங்கள் கிடைக்கும்படி செய்கின்றது. ஸமானவாயுவே மனிதன் சாப்பிடும் அன்னரஸத்தைத் தேஹத்தில் பரவச் செய்து அவன் ஞானேந்திரியங்களை நல்ல நிலையில் வைத்துக்கொண்டிருக்கின்றது. 'பிண்டத்திலிருப்பது போலவே அண்டத்திலும்' என்றபடி பிராணனின் ரூபாந்திரங்கள் வெளிப் பிரபஞ்சத்திலும் காணப்படும். ஸூர்யனே பிராணவாயு ரூபமாக இருந்து கண்ணுக்கு ஸஹாயமாக இருக்கின்றது. பூதேவியே (அக்னி) அபானவாயு ரூபமாக இருந்து தேஹத்தை நேராக பூமியில் உலாவும்படி செய்கின்றது. வ்யானவாயுவின் ரூபமே ஸாதாரணவாயு. பிரபஞ்ச தேஜஸ்ஸே உதானவாயுவின் ரூபம். ஆகாசமே (பூமிக்கும் ஆகாயத்திற்கும் இடையிலிருப்பதே) ஸமானவாயுவின் ரூபம். மரணகாலத்தில் உதானவாயுவின் தேஜஸ் குறைய இந்திரியங்கள் எல்லாம் மனத்தில் அடங்கும். அதுவும் பிராணனில் மூழ்கி விடும். இந்தப் பிராணன் ஆத்மாவோடு சேர்ந்து ஜீவகாலத்தில் செய்த கர்மங்களுக்குத் தகுந்த ஸ்தானத்தைச் சென்றடைகின்றது. இம்மாதிரி பிராணனுடைய ரூபாந்திரங்களை அறிபவன் குலம் க்ஷீணிப்பதில்லை. இவன் மரணமற்றவனாகிறான்.

வினு 4.—தூங்குவது, விழித்திருப்பது, ஸ்வப்நம் காணுவது, தூக்கத்தில் ஸுகம் அனுபவிப்பது ஆகிய இவைகள் யாவை? இவைகள் எதை ஆதாரமாக உடையவை? (என்று ஸூர்யர்பேரன்கார்க்யன் கேட்டான்.)

விடை 4.—அஸ்தமிக்கும் ஸூர்யன் ஒளி ஸூர்யனுள் அடங்கிநின்று அது உதயமாகுங்கால் எவ்வாறு வெளி ஏறுகிறதோ, அதுபோலத் தூங்குங்கால் ஸகல இந்திரியங்களும் மனதுள் அடங்கிவிட ஒருவன் அப்பொழுது

இந்திரிய வ்யாபாரங்களைச் செய்யாது விழித்த பின்னர் தொழில் செய்கிறான். தூக்க ஸமயத்தில்கூட வாயுக்கள் எல்லாம் தொழிற் படுகின்றன. இந்த நவத்வாரமுடைய தேஹமாகிய பட்டணத்தில் தொழிற்படும் அபான வாயுவே கார்ஹபத்யாக்னிக்கு ஸமம், வ்யான வாயுவே அன்வாஹார்ய பசனாக்னி (அதாவது தக்ஷிணாக்னி) க்கு ஸமம், பிராணவாயுவே ஆஹவனீயாக்னிக்கு ஸமம். ஸமானவாயுவே மூச்சு இழுத்தல் விடுதலாகிய ஆஹுதிகளை (உண்டாகும் பலனை) தேஹம் எங்கும் பரவச் செய்வதால் ஹோதாவுக்கு ஸமம் மனமே யஜமானன். உதானவாயுவே ஒவ்வொருநாளும் தூக்கஸுகத்திற்கு மனிதனைக்கொண்டு செலுத்துவதால் யக்ஞபலனுக்கு ஸமம். (ஆதலால் தூக்கமே ஓர் யக்ஞத்திற்கு ஸமம். இதில் அபான வாயுவே வலிமை உடையதாகின்றது. ஆதலால் அதைப்பற்றி முக்கியாக்னி என்றும் மற்ற வாயுக்களை இதற்கு உட்பட்டவை என்றும் கூறப்பட்டது). இம்மாதிரி தூக்கம் உண்டாகுங்கால் முன்னர் அனுபவித்தவைகளைத் தன் பலத்தாலேயே மனது அனுபவிக்கிறது. சிற்சில ஸமயத்தில் முன்னர் அனுபவிக்காத (அனுபவித்ததாக ஞாபகமில்லாத) வைகளையும் மனம் அனுபவிக்கும். (இவைகள் பெரும்பாலும் பூர்வஜன்ம அனுபவங்களாக இருக்கலாம்) மனம் தேஜஸ்ஸால் (ஆத்மதேஜஸ்ஸால்) மூடப்படுங் காலத்தில் ஸ்வப்நம்கூடக் காணாது அடங்க ஓர் வித ஆனந்தம் பிறக்கும். ஸாயுங்காலங்களில் பக்ஷிகள் தமது கூடுகளிருக்கும் மரங்களை அணுகுவதுபோல மனம் முதலிய எல்லாம் இந்தக்காலத்தில் ஆத்மாவை அணுகும். இந்தக்காலத்திலும் ஒங்கிநிற்கும் ஆத்மாவே புருஷன். இவனால்தான் இந்திரியங்கள் முதலியவைகள் எல்லாம் தொழிற்படும். இப்புருஷனும் ஆத்மாவாகிய பரம்பொருளில் அடங்கும். இம்மாதிரி புருஷனும், இந்திரியங்களும், பிராணன்களும் அடங்கும் அழிவற்ற ஆத்மாவை உள்ளபடி உணருபவன் எல்லாமாகி ஸர்வஞ்ஞனாகிறான்.

வினா 5.—இறக்கும்வரை ஓம் என்பதை த்யானம் செய்பவன் கதி என்ன? (என்று சிபிபிள்ளை ஸத்யகாமன் கேட்டான்.)

விடை 5.—ஓம் என்பது பரப்ரஹ்மமும் அபரப்ரஹ்மமுமாம். இதன் முதல் மாத்திரையை த்யானம் செய்பவன் அதனால் ஞானத்தை அடைந்து ருக்வேதங்களால் பூலோகம் சேர்க்கப்பட்டு அங்கு தபஸ், சிரத்தை, ப்ரஹ்மசரியம் முதலியவைகளை அனுஷ்டித்துச் சிறப்படைவான். இதன் இரண்டாம் மாத்திரையை த்யானம் செய்பவன், மனத்துள் அடங்கி யஜுர் வேதங்களால் அந்தரிக்ஷம் சந்திரலோகம்கொண்டுபோகப்பட்டு அங்குச்சிறப்படைந்து மறுபடியும் (பூலோகத்திற்குத்) திரும்புவன். இதை முழுவதும் கொண்டு மூன்று மாத்திரையாக த்யானிப்பவன் ஸூர்யனோடு ஒன்றுபட்டு பாம்பு சட்டையுரிப்பதுபோல பாபத்தினின்றும் நீங்குவான். இவன் ஸாமவேதத்தால் ப்ரஹ்மலோகம் சேர்க்கப்படுவான். இவனுக்கே 'பார்த்தவிடமெல்லாம் பரவெளியாகத் தோன்றும்.' ஆதலால் ஓங்காரத்தை உள்ளபடி உணருபவன் நிச்சலமான ஸ்திரத்தை அடைவான். (இங்குக்கூறப்படும்மூன்றுமாத்திரையாவன: ருக், யெஜுஸ், ஸாமவேதங்களைக் குறிப்பிக்கும் அ, உ, ம், என்பவைகளே. இவைகளைப் பரம்பொருளது குறியாகக்கொண்டு த்யானம் செய்பவர்கள் பிரஹ்மலோகம் வரையில் போய் அங்குப் பிரஹ்மாவால் உபதேசம் பெற்றுப் பரப்ரஹ்மபதம் பெறுவர்.)

வினா 6.—16-கலைகளையுடைய புருஷன் யார்? (என்று பரத்வாஜர் பிள்ளை ஸுகேசன் கேட்டான்.)

விடை 6.—இந்தத்தேஹத்திலேயே 16-கலைகளையுடைய புருஷன் இருக்கிறான். இவைகள் புருஷனிடமிருந்தே உண்டானவை

(இவைகள் வேறாகி நிற்காவிடில் புருஷன் தேஹ ஸம்பந்தத்துடன் இருக்கமுடியாது.) இவன் ஆதியில் 'எனக்கு ஆதாரம் எது?' என்று த்யானம் செய்தான். உடனே பிராணன் உண்டானது. அதிலிருந்து சிரத்தையும், பின்னர் முறையே ஆகாசம், வாயு, தேஜஸ், அப்பு, ப்ருதிவி, இந்திரியங்கள், மனம், விஷயங்கள், பலம், த்யானம், மந்தரம், கர்மம், லோகாந்தரங்கள், நாமங்கள் இவைகள் உண்டாயின. இவ்வாறு புருஷனிடமிருந்தே இப்பதினாறு கலைகளும் பிறந்தன. ஆறுகள் எல்லாம் ஸமுத்ரத்தை அடைந்து உருவிழந்து எவ்வாறு ஸமுத்திரத்தோடு இரண்டறக் கலக்கின்றனவோ, அவ்வாறே இப்பதினாறுகலைகளும் புருஷனுள்ளேயே அடங்கிக் கலக்கும். இவைகளின் நாமரூபாதிகள் அழிந்துபோகும் புருஷனாகவே இவை சேஷிக்கும். எவ்வாறு சக்ரத்தின் இருசுக்குடத்தில் எல்லா குறுக்குக் கம்புகளும் தாங்கிநிற்கின்றனவோ, அவ்வாறே இப்பதினாறு கலைகளும் புருஷனையே ஆதாரமாக உடையவை என்று அறிபவன் மரணத்திற்கு அப்பாற்பட்டவனாவான். (இந்தப்பிராணனே தொழில் ஆரம்பம், சிரத்தை தொழில் நடத்த ஸஹாயமாவது, பஞ்சபூதங்கள் தொழிலுக்கு ஆதாரமானவை, இந்திரியங்களும் மனமும் தொழிலுக்குத்தகுந்தகருவிகள், பலம்தொழில் நடத்தும் சக்தி, த்யானம் ஸன்மார்க்க ஸாதனம், மந்தரம் த்யானவஸ்து அளிப்பது, ஸத்கர்மம் சித்தசுத்திக்குக்காரணம், லோகாந்தரம் ஸத்கர்மபலன், நாமங்கள் இவைகளைப் பகுத்தறிய ஸஹாயமானவைகள்.)

இங்குச்சொல்லப்படும் விஷயங்களைச் சுருக்கிக் கூறப்புகுங்கால் முறையே பிரபஞ்ச காரணம், தேஹிலக்ஷணம், பஞ்ச வாயுக்களின் லக்ஷணம், அவஸ்தாத்ரிய லக்ஷணம், ஓங்கார . உபாஸனை, புருஷலக்ஷணம் ஆகிய இவைகளே என்பது வெளியாகும். இவைகளை ஐயம் திரிபர உணரும் ஒருவனுக்கு வேதாந்த ஞானம் பூரணமாக உண்டாகும் என்று கூறத் தடையும் உண்டோ?

பஞ்சதந்திரம் பாடிய

வீரமார்த்தாண்ட தேவர்

VEERA MARTHANDA TEVAR

AUTHOR OF THE *Panchatantra* IN VERSE

பஞ்சதந்திரமெனப்படும் இச்சிறந்த நூலானது மேன்மையான நீதி போதனைகளை ஜனங்களுக்கு உள்ளூரப் புகட்டுவதில் ஒப்புயர்வற்றதென்பது எவருமறிந்த விஷயம். பைசாசவாசனாகிய "கரணபூதி" என்பவருக்குப் பாடலிபுரத்தின் வேந்தனாகிய நந்தனின் அமைச்சர் "காத்யாயன்" என்ற இயற்பெயரைக் கொண்ட *"வரருசி" என்பார் கூறிய "கதாசரித்சாகரம்," யாழ்ப்பாணம் நாகநாத பண்டிதரவர்கள் வடமொழியினின்றும் தமிழில் மொழிபெயர்த்த "ஹிதோபதேசம்," "ஜாதகக்கதைகள்," "பன்னிருநீதிக்கதை" முதலாகக் கூறப்படுகிற கதைவகைகளில் "பஞ்சதந்திரக்கதையும்" ஒன்று. இந்நூல் "மித்திரபேதம், ஸுகிர்ல்லாபம், ஸந்திவிக்கிரகம், அர்த்தநாசம் அல்லது லப்தஹானி, அசம்பிரேக்ஷ்யகாரித்வம்" என்னும் ஐந்துபிரிவாகப் பிரிக்கப்பட்டு ஐம்பத்தெட்டுக்கதைகளையுடையது. இதனைத் தமிழ்நூலார் முறையே நட்புப்பிரித்தல், நட்புப்பேறு, அடுத்துக் கெடுத்தல், பேறழிவு, ஆராயாது செயல் என வழங்குவர். இதனைப் பாடியவர் நுண்ணறிவாளராகிய "சோமசன்மா" என்னும் அந்தண சிரேஷ்டராவர். இவர் இந்நூலினை முதன் முதல் வடமொழியில் வெளியிட்டார். அதன்பின் அவை பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுத் தேயமெங்கணும்வான்நதியின் பெருக்கெனநிலவத்தொடங்கியது. "ஸுதரிசனன்" என்னும் அரசனுடைய அரும்புதல்வர்களின் புத்தியைக் கூர்மைப் படுத்தற்பொருட்டு ஸோமசன்மாவால் பாடப்பட்ட இந்நூலின் காலம்,

* உலகத்திலுள்ளஉத்தமமான ஒவ்வொன்றிலும்இவன் மனம் ருசித்தலினால் 'வரருசி' என்ற பெயர் பெற்றனனென்ப.

கிரீஸ்தாப்தத்திற்குச் சில நூற்றாண்டின் முன்னரே என்பது தெரியவருகிறது. எவரும் விரும்பிப்படிக்குந் தன்மையினவாய்க் கற்றாரும் மற்றாரும் காதலித்து ஏற்குந் திறமை பூண்டு, நமது ஆரியமதத்தினர்க்குரிய பாஷைகளில் முதன்மையாய் வழங்கிவந்த ஸம்ஸ்கிருதத்தில் அழகானநடையில் விளங்கிய இப்பஞ்சதந்திரக் கதையினை கி.பி.531—572-ம் ஆண்டுகளில் அரசுபுரிந்த "நூஷர்வான்" என்னும் பாரசீக அரசன் காலத்துப் பாரசீக பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டது. இதனால் 6-ம் நூற்றாண்டின் முன்னமே வடமொழிப் பஞ்சதந்திரம் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்பது விளங்குகின்றது. பாரசீகத்திலிருந்து அரேபியர் தம் பாஷையில் மொழிபெயர்க்கலாயினர். அரபின் பாஷையிலிருந்ததை "சிமியக் சேத்"என்பவர் 1080-ம் ஆண்டில் கிரேக்பாஷையில் மொழிபெயர்த்தனர். கிரேக்பாஷையிலிருந்து "பாஸ்சின்ஸ்" என்பவர் லத்தீன் பாஷையில் மொழிபெயர்த்தனர். 1215-ம் ஆண்டு லத்தீன் பாஷையிலிருந்து "ராபிஜோஎல்" என்பவர் எபிரேய (Hebrew) பாஷையில் மொழிபெயர்த்தனர். 1250-ம் ஆண்டு அரபிக் பாஷையினின்றும் ஸ்பானியர்கள் மொழிபெயர்க்கலானார்கள். 15-ம் நூற்றாண்டிலே முதன்முதல் இக்கதைகள் ஜர்மன் பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டன. அக்காலந் தொடங்கியே ஏனைய ஐரோப்பிய பாஷைகள் பலவற்றினும் மொழிபெயர்க்கப்படலாயின. இவைகளே பின்பு கட்டுக்கதைகள் என்ற பெயருடன் வழங்கலாயிற்று.

ஓர் ஆரியன், தன் தேசத்தின் கண்ணே, பரம்பரையாக உலாவிவந்த கதைகளை ஒரு பிரபந்தமாக ஸம்ஸ்கிருதபாஷையிலியற்றவே உலகத்திலுள்ள சிறுவர்களெல்லாம் படித்துக்களித்துப் பொழுதுபோக்கும்படியாக வாய்த்தது. இங்ஙனம் பலபாஷையிலுஞ் சென்று வியாபித்த இப்பஞ்சதந்திரக் கதையினை, நம்முன்னோர்கள் உலகத்தார்க்குபகரித்த பெருமிதமும், அறிவு வீற்றிருந்த செறிவுடை மனத்தின் கல்வி வன்மையும், எத்தகையமேம்பாடுடையன. காலக்ரமத்தில் இவ்வரியநூல் நாட்டு ஸ்வயபாஷைகளிலெல்லாம் மொழிபெயர்க்கப் படலாயின. சொற்சுவையும், பொருட்சுவையும் நிரம்பிய நந்தமிழ்ப் பஞ்சதந்திரமோ நேரில் ஸம்ஸ்கிருதத்தினின்றும் மொழிபெயர்க்கப்படாமல் கன்னட பாஷையினின்றும் மொழிபெயர்க்கப் பட்டது. தமிழ்ப் பஞ்சதந்திரத்தை விருத்தப்பாவினின்றும் வசன நடையாக்காமல் கன்னட பாஷையிலிருந்து மொழிபெயர்த்து வசனநடை யாக்கினதற்குக் காரணம் யாதென்று புலப்படவில்லை. தமிழில் வசனநடையாகச்செய்தவர் 1843-ம்வருஷம் செங்கற்பட்டில் ஸ்வதேச நியாயாதிபதி உத்தியோகத்தை வஹித்தவரும், அதற்குமுன் துரைத்தனக் கல்விச்சாலையில் தமிழ்ப்பண்டிதரா யிருந்தவரும், தேசீய பாஷைகள் நான்கிலும் பரிச்சிய முடையவருமான வில்லியம்பாக்கம் வித்வான் தாண்டவராய முதலியாராவர். இவர் பஞ்சதந்திரத்தை வசன நடையில் தமிழில் மொழிபெயர்க்க வேற்பட்ட காரணம் கி. பி. 1826 வருஷம் சென்னைக் கல்விச்சங்கத்துத் தலைவராகிய மிஸ்டர் "ரிச்சார்டு கிளார்க்கு" துரையவர்களின் அன்பான உத்திரவெனத் தெரிகிறது. இப்பஞ்சதந்திர வசனத்தை இதற்கு முன் அச்சிட்டிருந்த பலபிரதிகளையும் செவ்வனே ஆராய்ந்து குற்றமெல்லா முற்றுமகற்றி வித்வான் தாண்டவராய முதலியாரவர்களின் சரிதத்தையும் உடனமைத்து மிக அழகாக அச்சிட்டு 1909-ஷு வேலூர் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள் தமிழகத்திற்குதவியது என்றும் மறக்கற்பாலதன்று.

இதுபோலவே தமிழில் விருத்தப்பாவினமாக வமைந்துள்ள பஞ்சதந்திரப் பிரதியைச் சுத்தபாடமாகவும், அதனைத்தமிழறிந்தோர்க்கு

உதவிய புலவர் வீரமார்த்தாண்டதேவர் வரலாற்றினையும், லோகோபகாரங்கருதி சிறப்பு மிக்குடைய நந்தமிழகப்புலவ ரெவரேனும் நம்பாடசாலை மாணக்கர்கட்கு உதவ இதுவரை முன் வந்திருப்பதாக நாமறிந்தோ மில்லை. பண்டைக்காலத்தில் நமது நாட்டிலேற்பட்டுள்ள நீதிபோதனை நெறியை நாமெல்லாரும் நழுவவிடாது காத்துவருவதற்கு இது சுத்தபாடமாகமட்டும் துலங்கின் பொன்மலர் நாற்ற மடைந்ததற் கொப்பாம். இப்பெருங்குறை நம்மைவிட்டொழிவதற்குத் தமிழ்வளர்க்குந்தருவாகிய ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவரவர்கள் திருவருள் நோக்க மொன்றிருக்குமேல் போதுமானதாம். ஈசன் என்று அருள்புரிவரோ? நிற்க.

பஞ்சதந்திர நூலினைச் செம்மையான நடையில் செய்யுள் ரூபமாக வமைத்துப்பாடிய வீரமார்த்தாண்ட தேவரைப்பற்றிய சரிதமொன்றும் நமக்கு நன்கு புலப்படவில்லையாயினும் நாமறிந்தவரை கூறிவைப்பின் அச்சரிதத்தை நன்குணர்ந்த மேதாவியர் முற்றிலும் வெளியிட்டுபகரிக்க முற்படுவார்களென்ற நம்பிக்கை கருதியே ஈண்டெழுதத் துணிந்ததாமென்க. குற்றமுளதாயின் உலகம் பொறுக்க.

வீரமார்த்தாண்ட தேவர் என்னும் பெரிய புலவரவர்களின் ஜனனமாதிய விசேடவரலாறுகளொன்றும் நாம் அறிந்து மகிழ்தற்கிடமில்லையாயினும், உத்தேசம் நூறுவருடங்களுக்கு முன் விளங்கியிருந்தவரென்று கூறத் தடையில்லை. பஞ்சதந்திரத்தை இனிய வசன நடையில் கி. பி. 1826-ல் தமிழில் மொழிபெயர்த்த தாண்டவராய முதலியார் என்பார்க்கு இப்புலவர் சிறிது முற்பட்டவரென்பது தெளிவாகின்றது. தாண்டவராய முதலியார் காலம் இற்றைக்கு 85-ஆண்டென்ப. வீரமார்த்தாண்டதேவர், இலக்கிய இலக்கணங்களிற் சிறந்தோங்கிப் புலவர் மகிழ்ந்து புகழ்தற்குரிய பெரும்புலவரல்லாவிடினும், ஒழுகிய வோசையும், விழுமிய பொருளும், ஆழ்ந்த கருத்தும் விரவிச்செறிந்து படிப்பதற்கினிமைபயக்குஞ் சொல்லலங்காரத்தோடு செய்யுளியற்றுந் தன்மையில் மேம்பட்டுத் தமிழகம்புகழ வீற்றிருந்த செந்தமிழறிஞர் பல்லோரில் இவரையுமொருவராகக் கொள்ளுதலும் இழுக்காகாது.

பஞ்சதந்திர நூலின் சிறப்புப்பாயிரத்தில்,

"வயவீர ரொன்பான் வழியுற்ற மேலோன்
செயவீர மார்த்தாண்ட தேவன்—வியமாய
பன்னூலி னுண்ணூலாம் பஞ்சதந் திரத்தை
மன்னூலாச் சொற்றான் மகிழ்ந்து"

எனவரும் செய்யுளில், இரண்டாம் அடியால் இப்புலவர்க்கு "வீரமார்த்தாண்ட தேவர்" என்ற பெயர் தெரிதலோடு முதலடியில், "வயவீர ரொன்பான் வழியுற்ற மேலோன்" என்ற அடைமொழியால் இப்புலவரது குலம் *"தந்துவாய" ரென்றும், †"சேங்குந்த" ரென்றுங் கூறப்படுகிற "கைக்கோள"ரது மரபென்பதுணரப்படும். 'வயவீரரொன்பான் வழியுற்றமேலோன்' என்பதற்கு 'வெற்றியையுடைய ஒன்பது வீரர்களது சந்ததியிற் பிறந்த பெரிய'ரென்று பொருள். பரமசிவனது மனைவி

* "நூல் பயிலும் வாயர்," இதனை வித்வான் மாகறல் கார்த்திகேய முதலியார் தாமியற்றிய "செங்குந்தர் மரபு விளக்கம்" என்னும் நூலில்,

"தாயரும் பன்னகன் மாணக்கர்
யாருந் தழைத்துவர
நேயரி னெண்ணி முகமே
யகமே நெடிதலர்ந்தே
ஆயரு நூல்பல வாய்கொண்
டுரைத்தலி னன்றந்து
வாயரென் றேபெயர் பூண்டனர்
செங்குந்தர் மண்டலத்தே"

என விளக்கியவாறறிக.

† "செங்குந்தர்" பகைவரது உதிரத்தாற் சிவந்த ஈட்டியை யுடையவர்.

யான பார்வதி தேவியினது காற்சிலம்பினின்று முன்னொருகாலத்திற் சிதறிய ஒன்பது மணிகளில் பிரதிபலித்த அவளது சாயையாகிய ஒன்பது பெண்களின் புத்திரர்களும், சுப்ரமணியக் கடவுளின் உடன்பிறந்தவர்களுமான வீரவாகு, வீரகேசரி, வீரமாமகேந்திரன், வீரமாகேச்சுரன், வீரமாபுரந்தரன், வீரராக்கதன், வீரமார்த்தாண்டன், வீராந்தகன், வீரதீரன் என்னும் நவவீரர்களுடைய வம்சத்தவர் கைக்கோளரென்பது ஓர் மரபு. இதனை ஒட்டக்கூத்தர் பாடிய "ஈட்டியெழுபதி"னுலுங் காண்க.

இவ்வளவே இப்புலவர் வரலாறுகத் தெரிந்தவை. ஒப்புயர்வற்றமேன்மைமக்களென உலகம் புகழத் திகழ்ந்த புலவர் பெருமான்களின் சிறந்த சரிதங்கள் தக்க ஆராய்ச்சியோடு, காலவரையறையாதிய விசேட சம்பவங்களுடன் வெளிவராத காரணத்தால், அன்னார் கல்வி, செல்வம், புகழ், பெருமை, குணம், அருஞ்செயலாதி விஷயங்களை நாமறிந்து மகிழ்ந்து போற்றிக் காத்தற்கு இயலாதவாறுயின. அதனல் அவ்வரலாறுகள் குடத்திலிட்ட விளக்கென மறைந்தது. மேனட்டு நாகரீக வைரம்பற்றிய ஆங்கிலக் கவிகளின் சரிதங்களில் இத்தகைய குறைபாடுகள் காண்பது அரிதாகவே முடியும். இவற்றிற்குக் காரணம் நந்தமிழ் மக்கள் சரித்திர ஆராய்ச்சியில் கவலைகொள்ளா திருந்ததுவேயாம். இஃது தமிழ்பாஷையின்தௌர்பாக்கியம் போலும். நமது நாட்டிற் கண்மணிபோல் விளங்கிய கவிஞர் சிகாமணிகளது அழகிய சரிதங்களை நன்ருகப் பரிசீலனைசெய்து வெளியிடுவதை நாம் படித்துணருவதால் அவர்களிடம் நமக்கு கௌரதாபுத்தி அதிகமாதலோடு ஜனஸமூஹ வாழ்வை உயர்வும், ஒழுங்கும் பெறச் செய்வதற்கும் முக்கிய ஏதுவாமன்ரே?

சி. கு. நாராயணசாமி முதலியார்.

பூமியும் அதன் மேற்பரப்பும்

EARTH & ITS CRUST

பூமியின் உற்பத்தியைப்பற்றி நாம் இவ்விடத்தில் அதிகமாய் விவரியாது, சூரியனிடத்திலிருந்து வேருகப் பிரிக்கப்பட்ட அநேக கிரஹங்களில், இதுவுமொன்றென்கிற கொள்கையை மாத்திரம் தெரிந்துகொள்வோம். இப்பூமியின் வடிவம் உருண்டையாயிருப்பதால் இதைப் பூகோளம் என்று சொல்வதியல்பு. இது ஆதியில் ஓர் வாயுவாலாகிய கோளமாகவிருந்து, ஆகாயத்தின் குளிர்ச்சியால் வரவர குளிர்ந்து திரவகோளமாகி, பிறகு தற்காலமிருக்கும் திடதிரவ (Plastic or Semi-solid) கோளமாயிற்றென்று விளங்குகின்றது. இப்பூமியை ஒரு கோளம் (Globe or Sphere) என்று சொல்வதியல்பாயினும், இது சம்பூர்ணமான கோளமல்ல. சற்று அண்டாகாரமாகவே (Elliptical), அதாவது கொஞ்சம் நீண்டு இருபக்கத்திலும் தட்டையான கோளமாகவேயிருக்கிறது. பூமத்தியரேகை (Equator) பக்கத்தில் கொஞ்சம் பெருத்தும், இரு துருவங்களிலும் (Poles) கொஞ்சம் தட்டையாயுமிருக்கிறது. இதற்குக் காரணமென்னவென்று பார்ப்போம்:—

மிகத் தெளிவான சுத்தஜலத்தில் ஒரு சொட்டு எண்ணெயைவிட்டால், அது உருண்டை வடிவம் எடுத்துக்கொண்டு தண்ணீர்மேல் மிதக்கிறது. அச்சிறு உருண்டையை நாம் ஒரு மெல்லிய துரும்பினுலாவது, கம்பியினுலாவது வேகமாய் சுழற்றினுல் அதன் உருண்டை வடிவம் கொஞ்சம் தட்டையாகிறது. ஓர் இரும்புக்கம்பியை மேஜையில் நட்டு, அதனடியில் 5, 6 மெல்லிய பித்தளைப்பட்டங்களின் ஓர் முனையைப்பிணைத்து, அவைகளின் மற்ருேர் முனையை இரும்புக்கம்பியில் மேலும் கீழும்

14 OCT 1910 MADRAS

தாராளமாய்ப் போகக்கூடிய ஓர் வளையத்தில் பிணைத்துவிட்டு, அவ்விரும்புக்கோலை வேகமாய்ச் சுற்றினால், பித்தளைப்பட்டங்கள் பிணைத்துள்ள வளையமானது வரவர கீழே வருகிறது. அப்படி வளையம் கீழ்வரும்போது, பித்தளைப்பட்டங்கள் வளைகின்றன. வளைந்த பட்டங்கள் வேகமாய்ச் சுற்றும்போது, தட்டையான ஓர் உருண்டை சுற்றுவதுபோல் காணப்படுகின்றது. இதுபோலவே, பூகோளம் வேகமாய் தன்னைத் தானே சுற்றுவதால், இருதுருவங்களிலும் தட்டையாய்க் காணப்படுகிறது. இப்படி எண்ணுவதற்கு, பூமியின் பரப்பும், உள்ளிருக்கும் வஸ்துக்களும், பித்தளைப் பட்டங்கள்போல் வளையக்கூடியதா யிருக்கவேண்டுமல்லவா? முற்றிலும் கடின திடபதார்த்தமானால் பூமி தட்டை வடிவம் அடையாது. ஆகையால்தான் முன் சொன்னதுபோல், பூமி திடதிரவ (Plastic) பதார்த்தமா யிருக்கிறதென்றெண்ணுகிறோம்.



மற்றொரு விஷயம் கவனிப்போம்: நாம் பூமியினின்று மேலே போகப்போக அதிகக் குளிர்ச்சியாக விருக்கிறதென்று நமக்குத் தெரியும். ஆகையால் தான் மனிதர்கள் வெயிற் காலத்தில் குளிர்ச்சிக்காக மலைப்பிரதேசங்களுக்குப் போகிறார்கள். அம்மாதிரியே, நாம் பூமியின் கீழ் போகப்போக அதிக உஷ்ணமாக விருக்கிறது. இவ்விஷயம், பெரிய சுரங்கங்களிலாவது, குகை முதலியவைகளிலாவது இறங்கிப் பார்த்தால் நன்றாய்த் தெரியும். மேலும் சீதோஷ்ண மளக்கும் கருவி (Thermometer) யால் இவ்வுஷ்ணம் அதிகரிப்பதை அளக்கலாம். இது முறையாய் சுமார் 45 முதல் 60-அடிக்கு ஒரு டிகிரி (1°F) அதிகரிப்பதாய் பூகர்ப்பசாஸ்திரிகள் (Geologists) சொல்லுகிறார்கள். அதாவது பூமியின் மேற்பரப்பில் 88-டிகிரி யிருந்தால், சுமார் 45-அடிக்குக்கீழ் 89° யும், 90-அடிக்குக் கீழ் 90-டிகிரியுமாக விருக்கும். ஆனால் இம்மதிப்பு சிற்சில விடங்களில் ஒவ்வாமலிருக்கலாம். 80 அல்லது 100-அடிக்குத் தான் ஒரு டிகிரி அதிகரிக்கலாம். ஆனால் எத்தனை அடிக்கு ஒரு டிகிரி அதிகரித்தபோதிலும், கீழே போகப் போக உஷ்ணம் அதிகரிப்பது மாத்திரம் உண்மையே. அப்படியானால் சுமார் 5-மைல் ஆழம் போனால் எவ்வளவு உஷ்ணமிருக்க வேண்டும்? அளக்கமுடியாத அசாத்திய உஷ்ணமாயிருத்தல் வேண்டும். அவ்வுஷ்ணம் இப்பூமியிலுள்ள எல்லா வஸ்துக்களையும் உருக்கக்கூடியதாயிருக்கும். ஆகையால் கீழே கொஞ்சதூரத்தில் ஒரே திரவபதார்த்தமாயிருக்க வேண்டுமென்று நினைக்கிறோம். ஆனால் அத்திரவ பதார்த்தம், அதன்மேலிருக்கும் பூமியின் மேற்பரப்பிலுள்ள எல்லா திடதிரவபதார்த்தங்களின் பாரத்திற் (Pressure) குள்பட்டிருக்கிறது. இப்பாரத்தால் என்ன நேரிடுமென்று பார்ப்போம்:

படத்திற் காட்டியிருப்பதுபோல் ஒரு கண்ணாடிபாத்திரத்தில் கொஞ்சம் ஜலம் எடுத்து அதை ஒரு சட்டத்தில் நிறுத்துவோம். இந்த ஜலத்தை ஓர் சாராய விளக்கினாலாவது அல்லது ஓர் சூட்டடுப்பில் வைத்தாவது சுடவைப்போம். சற்றுநேரத்திற்கெல்லாம் ஜலம் சூடாகி கொதிக்க நீராவி மேல் கிளம்புகின்றது. பாத்திரத்தில் ஜலமட்டத்திற்கு மேலிருந்த காற்றெல்லாம் ஆவியால் தள்ளப்பட்ட பிறகு விளக்கை எடுத்துவிட்டு, அப்பாத்திரத்தின் வாயை இறுக ஒரு தக்கையால் மூடவும். இப்பொழுது அப்பாத்திரத்தைத் தலைகீழாகக் கவிழ்த்து அந்தச்சட்டத்தில் நிறுத்தவும். இதற்குள் உஷ்ணம் கொஞ்சம் குறைவதால், ஜலம்

கொதிப்பது கொஞ்சம் கொஞ்சமாயடங்க ஆரம்பிக்கும். ஒருதுணியைக் குளிர்ந்த ஜலத்தில்நனைத்துக்கொண்டு, அப்பாத்திரத்தின்மேல் பிழிய, அதிலுள்ள ஆவி குளிர்ந்து நீராகும்.



இப்படி ஆவி ஜலமாக உஷ்ணம்குறைந்திருந்தபோதிலும், ஜலம் மறுபடி நன்றாய்க் கொதிக்கும். இது என்? நாம் துணியிலிருந்து ஜலம் விடுவதற்குமுன் பாத்திரத்தின் ஜலத்திற்கு மேல், அதிலிருந்து வந்த ஆவியின் பாரம் மிகவுமிருந்தது. அப்பாரம் கீழிருந்த நீர் ஆவியாகாமல் தடுத்து, அழுத்திக்கொண்டிருந்தது. ஆகையால் கொதிக்கவில்லை. சாதாரணமாய் முதலில் திறந்த பாத்திரத்திலவைத்துக் காய்ச்சினபோது, மேலிருக்கும் ஆகாயத்தின் பாரத்திற்குள்பட்டிருந்தது. இப்பொழுது நாம் துணியினின்று குளிர்ந்த தண்ணீர் பிழிந்தவுடன், உள்ளிருந்த நீராவி, தண்ணீராகமால், பாத்திரத்தின் தண்ணீர்மேலிருந்த பாரம் குறைந்தது. உடனே, நீரை ஆவியாகாமல் செய்த தடை நீங்கிற்று. ஆகையால்தான் உஷ்ணம் மிகக்குறைந்திருந்தபோதிலும் தண்ணீர் கொதிக்கின்றது. இதுபோல் எல்லாவஸ்துக்களும் நடைபெறுகின்றன. ஒரு திரவபதார்த்தம் வாயுபதார்த்தமாவதற்கும், ஒரு திடபதார்த்தம்திரவபதார்த்தமாவதற்கும்உஷ்ணம் மாத்திரம் காரணமல்ல; அதன்மேலிருக்கும் பாரத்தையும் கவனிக்க வேண்டும். பாரம் குறைந்தால் உஷ்ணம் கொஞ்சம் குறைவாயிருக்கும்போதே மாறுதலுண்டாகும். அதாவது ஒருதிடபதார்த்தமானது மிகுந்த பாரத்திற்குட்பட்டிருந்தால், அது அதியுஷ்ணமாயிருந்தபோதிலும், திரவபதார்த்தமாகாது. ஒரு திரவபதார்த்தம்மிகுந்த பாரத்திற்குட்பட்டிருந்தால், அது எவ்வளவு சூடாகினும் ஆவியாகாது. ஆகையால் பூமிக்குள்ளிருக்கும் வஸ்துக்கள் அளவில்லாத அதி யுஷ்ணமாயிருப்பினும், பெரிய பாரத்தின் கீழிருப்பதால் வாயுபதார்த்தமாகமாட்டா. திட பதார்த்தமாகவேனும் திரவபதார்த்தமாகவேனுமிருக்க வேண்டும். பூகர்ப்பசாஸ்திரிகள் (Geologists) இரண்டிற்கும் பொதுவாக ஓர்வித குழம்பான வஸ்துவாயிருப்பதாக நம்புகிறார்கள். ஆனால் எவ்வளவு தூரம் வரையில் திடபதார்த்தம் என்றும் எவ்வளவு தூரத்திற்குப் பிறகு இக்குழம்பான பதார்த்தமென்றும் நிச்சயமாகச் சொல்லமுடியாது.

இப்பூமியின் மேற்பக்கத்திலிருந்து சுமார் 25 முதல் 50-மைல் தூரத்திற்குளுள்ள பரப்பையே, பூமியின் மேற்பரப் பென்று சொல்லலாம். இப்பரப்பை மூன்று பாகங்களாக பிரிக்கலாம். அவையாவன: நிலபாகம், நீர்பாகம், வாயுபாகம். நீர் பாகமாவது, பூமியைச் சூழ்ந்திருக்கும் சமுத்திரங்கள், ஏரிகள், ஆறுகள் முதலிய நீர்பரப்பேயாம். வாயுபாகமாவது, நம்மை எப்பக்கமும் சுற்றியிருக்கும் ஆகாயமும் (Air) அதில் சிதறியிருக்கும் வாயுக்களுமே. இம்மூன்று பாகங்களுள் நிலபாகமே முக்கியமானது. நமக்குத் தெரிந்திருக்கும் நிலங்களும், மலைகள், கற்கள் முதலியவைகளும்இப்பாகத்தில் அடங்கியிருக்கின்றன. நீர், வாயு பாகங்களுக்குப் பாத்திரமாக அமைந்திருக்கும் தரை மட்டங்களும் இந்நிலபாகத்தில் அடங்கினவைகளே. ஆனாலும் இம்மூவற்றுள் ஒன்றுக்கொன்று நிச்சயமான வித்யாசங்கள் கொண்டு, இவைகளை வெவ்வேறாகக்கொள்வதும் கடுமை. ஏனென்றால், ஆறுகளும் ஏரிகளும் தண்ணீரில், நிலபாகத்தின் சிறு மணல்களையும், சேற்றையும் கரைத்து வைத்துக்கொண்டிருக்கின்றன. வாயுபாகத்தில் நீரானது மேகங்களாகச் சஞ்சரிக்கின்றன. ஆகையால் ஒன்றுக்கொன்று சிறிது சம்பந்தங்களிருந்துகொண்டே யிருக்கின்றன.

இவைகளைப்பற்றி விவரமாகப் பிறகு எழுதுவோம்.

எம். ஆர். சுப்ரமணிய அய்யர், பி. ஏ.

வியாஸ விதானம்

ESSAY WRITING

I. வர்ணனை வியாஸங்கள்

DESCRIPTIVE ESSAYS

3. காட்டு ஜந்துக்கள்—புலி

WILD ANIMALS—*Tiger*

குறிப்பு.—தோற்றம் முதலியன—காணப்படும் இடங்கள்—ஸ்வபாவம்—வேட்டையாடும் விதங்கள்—உபயோகங்கள்.

புலி பூனை இனத்தைச் சேர்ந்ததாயும் பார்வைக்கு மிக அழகாயும் உள்ள ஓர் காட்டு மிருகம். இதன் தேஹம் மஞ்சள் கலந்த சிவப்பு வர்ணமுள்ளது. இவ்வர்ணமுடைய தோலின் மேல் கறுப்புப் பட்டைகள் குறுக்காகக் காணப்படும். இதனாலேயே இதற்கு ஓர் அழகு ஏற்பட்டபோதிலும் இதைப் பார்த்தவுடன் ஒருவனுக்கு பயமும் கூடவே தோன்றும். இந்தக் கருப்புப்பட்டைகளை நாணற் புதர்களிலிருக்குங்கால் இதற்கு நாணலால் ஓர்வித இடையூறும் வாராமல் காக்கும் தன்மையுடையவை. இதன் பற்கள் கூராக இருப்பதோடுங்கூட வாள்போல அநேக கூர்மையான பாகங்களை யுடையனவாக இருப்பதால், இதன் கடிக்கு அகப்பட்டவைகள் தப்புவதே இல்லை. இதனால் புலி விஷமுடைய மிருகம் என்று சிலர் மதிக்கின்றனர். இதற்குச் சிங்கம், குதிரை முதலியவைகளுக்கு இருப்பது போலப் பிடரிமயிரே இல்லை. இது நல்ல தேஹக்கட்டுள்ள ஜந்துவாதலால் இதற்கு மிகுந்த பலம் உண்டு. இதுபற்றியே "பார்த்தால பசுப்போல, பாய்ந்தால் புலிபோல" என்ற வசனமும் வழங்கிவருகிறது.

இந்தக் கொடிய மிருகம் ஆசியாகண்டத்திலேதான் பெரும்பாலும் காணப்படுகிறது. இதன் உஷ்ணபாகங்களில் உள்ள புலிகளின் ரோமங்கள் அதிக மிருதுவாகவும் மற்றைய புலிகளின் ரோமங்கள் மிகுந்த உரப்பாகவும் இருக்கும். பாதகண்டத்தில் வங்காளத்தில் ஒருவித வேங்கை உண்டு. அதுதான் புலிகளுள் மிகுந்த கொடிய புலி. அது மிகுந்த பெரிய உருவத்தோடுங் கூடியது. ஒரேபாய்ச்சலில் 16-அடிதாண்டும் திறனுடையது. ஆதலால் அதற்கு 16-அடி வேங்கை என்று பெயர். புலிகளுள்ளேயே நரமாம்ஸ பக்ஷணி என்றும் பிராணிமாம்ஸ பக்ஷணி என்றும் இரண்டுவிதம் காணப்படும். ஸாதாரணமாக மான் முதலிய ஸாதுவான பிராணிகளையே துரத்திச்சென்று கொன்று தின்னும் ஸ்வபாவமுடைய புலி வயது சென்றதும் அவ்வாறு செய்யத் திறனில்லாமல் போக, கிராமங்களின் அருகில் உலாவி வந்து அகப்படும் இடையர்கள், தூங்குபவர் முதலியோரைப் புஜித்து மனிதமாம்ஸ ருசியைக் கண்டு நரமாம்ஸ பக்ஷணிகளாகின்றன என்பர் சிலர். வேறுசிலர் எந்தக்காலமானாலும் ஸரி ஒருதரம் மனிதமாம்ஸம் உண்ணும்படி நேர்ந்த புலி பின்னர் மற்றைய மாம்ஸங்களைக் கவனியாது நரமாம்ஸபக்ஷணி ஆகின்றது என்பர். ஸாதாரணப் புலிகள் காட்டில் சதுப்பு நிலங்களில் நாணற் புதர்களுக்குள் மிகுந்த உத்ஸாகமாக வாஸம்செய்யும். நரமாம்ஸ பக்ஷணிகளோ காடுசார்ந்த விடங்களில் உள்ள கிராமங்களின் அருகிலே உலாவிக்கொண்டிருக்கும். இவைகளைச் சுட்டுக் கொன்றுதான் நீக்கவேண்டும்.

புலி கோபமுடைய கொடிய பிராணி. ஆயினும் நல்ல தைரியம் இதற்குக் கிடையாது. ஸாதாரணமாகப் புலி நம்மைக்குறுக்கிட்டால் அது பயந்து ஓடும் ஸ்வபாவமே உடையது. அதை நாம் கண்கொட்டாது முதுகுகாட்டாது வெருட்டி நோக்கினால் அது நம்மைவிட்டுப் பயந்து ஓடிப்போய்விடும். நாட்டுப்புறங்களில் அநேகர் புலியைக்கண்டதும் பயந்து கடவுள்மேல் பாரத்தைப்போட்டு பயத்தால் அதை கண்கொட்டாது நோக்கி தப்புவித்துக்கொண்டிருக்கின்றனர். ஆனால் காயம் முதலியவைகள் செய்து,

அதற்குக் கோபத்தை மூட்டிவிட்டால் ஆவேசம் அதிகமாக அது மனிதனை எதிர்க்கும். ஒரு தரம் இரைக்காகக் கொன்ற பிராணியை இது நாலைந்து நாள் வைத்து அழுகும்படி செய்தே உண்ணும். இவ்வாறு செய்வதால் இதன் பற்களில் புழுக்கள் ஊரத்தொடங்க பற்களை காட்டிக்கொண்டு வெயிலில் இது உட்காரும். இந்த ஸமயத்திலே வேட்டைக்காரர்கள் விஷம் தடவிய அம்புகளாலாவது, குண்டுகளாலாவது பின்புறமிருந்து கொல்லுவது வழக்கம். கோபாவேசத்தில் அபாயம் வந்த இடம் நோக்கிப்பாயும் குணம் புலிக்கு இருத்தலால் அதை முன்புறமிருந்து கொல்வது மிகுந்த அபாயகரமானது; ஒருவேளை வேட்டைக்காரர்கள் மேல் அது விழுந்து அவர்களைக்கொன்றும் கொல்லும். சிங்கத்தைப்போல பசிக்குங் காலத்தில்தான் பிராணிகளைத் துரத்திக் கொல்வது என்ற ஒழுங்கு புலியிடமில்லை. எப்பொழுதுபிராணிகள் தென்பட்டபோதிலும் அவைகளைக்கொன்றுவிடும் கொடியகுணமுடையது. எல்லாவற்றையும் தனதாகச் சேர்த்து விட வேண்டுமென்ற அகங்காரமுடையது. இது பற்றியே பரம்பொருளிடம் அகங்கார லேசமே இல்லை என்பதைக் குறிக்கப் பெரியோர்கள் பரம்பொருளை வர்ணிக்குங்கால் 'புலித்தோலை அரைக் கிசைத்து' என்று மெய்ம்மறந்து பாடி யிருக்கின்றனர். இப்படி இருப்பினும் சிறுகுட்டியிலே புலியைத் தகுந்தபடி மாம்ஸாதிகள் கொடுத்து வளர்த்து வந்தால் அதுவும் பூனைபோல ஸாதாரணமாக வீட்டில் உலாவி வரும். ஆயினும் புலியை வளர்ப்பது அபாயம்தான். எப்படியாவது அது கொஞ்சம் மனித ரக்தருசியை அறிந்துவிட்டதானால் வீட்டிலிருப்போருக்கு அபாயந்தான்.

புலியை வேட்டையாடுவதில் அநேக ராஜாக்களுக்கு மிகுந்த உத்ஸாஹம் உண்டு. ஸாதாரணமாக இவர்கள் யானைகள்மேல் அம்பாரிகள் கட்டி அவைகளில் உட்கார்ந்துகொண்டு கூட்டமாகப் புலியிருக்கும் காடுகளுள் நுழைவார்கள். வேட்டைக்காரர்களில் சிலர் துப்பாக்கி முதலியவைகளுடன் சென்று நாணற் புதர்களை அடிக்க புலி வெளியில் கிளம்பும். அப்பொழுது யானைமேலிருப்பவர்கள் அதைக் குறிவைத்துச் சுட்டுக் கொல்வார்கள். இந்த வேட்டை மிகுந்த அபாயகரமானது. புதர் அடிப்பவர்கள் கதியையும், குறிதப்பிவிட்டால் புலிக்கு அருகிலுள்ள யானையின் கதியையும், அடிபட்டுப் புலி இறக்காவிடில் அம்பாரியில் இருக்கும் வேட்டைக்காரன் கதியையும், உற்றுநோக்கினால் இவ்வேட்டையின் அபாயங்கள் நன்றாக வெளியாகும். யானை புலியைக் கொல்வதற்குமுன் அதைப் புலி நன்றாகக் காயப்படுத்திவிடும். காயப்பட்டபுலி ஒரே அடியாய்ப் பாய்ந்து அம்பாரியிலிருக்கும் வேட்டைக்காரனைக் கொண்டே போய்விடும். இம்மாதிரி வேட்டை யாடுவதோடுகூட, குழியில் வீழ்த்தல், பிசின்தடவிய இலைகளைப் பரப்பி வைத்தல், சுருக்கு வைத்துப் பிடித்தல் ஆகிய இவ்வழிகளில் புலியைப் பிடித்துக் கொல்வதும் உண்டு. சில ஸமயங்களில் ஆடுகாட்டி வேங்கை பிடித்தலும் உண்டு. இதில் ஓர் ஆட்டை ஓர் மரத்தில் கட்டிவிட்டு அருகிலுள்ள ஓர் மரத்தில் வேட்டைக்காரர்கள் ஏறி இருந்து வேங்கை வருங்கால் அதைக் கொல்வார்கள்.

இம்மாதிரி பிடிக்கப்படும் வேங்கைகளின் உபயோகங்கள் என்ன? பொதுவாக அவைகளின் தோல்கள் நல்ல ஆஸனம் முதலியவைகளுக்குத்தகுந்தவைகள். புலிநகத்தால் கத்திப் பிடிகள்முதலிய அழகிய வஸ்துக்கள் உண்டாக்கலாம். மேலும் இவைகளைக் கொல்வதாலேயே அபாயம் நீங்குகின்றது. அதுவே சிறந்த பிரயோஜனம்அல்லவா? உயிரோடு பிடிக்கப்படும் புலியைப் பழக்கி நூதனக்கழைக்கூத்தர்கள் தமது அற்புத வேலைகள் செய்ய வைத்துக் கொள்கின்றனர். புலியால் இவைகளைத் தவிர வேறு பிரயோசனங்கள் அதிகமாக இல்லை.

[இம்மாதிரியே விவரிக்கக்கூடிய

வியாஸ விஷயங்கள்

1. சிங்கம்
2. சிறுத்தை
3. ஒட்டைச்சிவிங்கி
4. காட்டுப்பூனை
5. வாலில்லாக்குரங்கு
6. முதலை
7. முள்ளம்பன்றி
8. நரி
9. ஓநாய்
10. காண்டாமிருகம்

போதுக்குறிப்புகள்

(இக்குறிப்புக்களுள் சிற்சில எல்லா வியாஸங்களிலும் விஸ்தரிக்கமுடியாமலும் இருக்கலாம்.)

1. தோற்றம்—அங்கங்களின் உபயோகங்கள், பொதுக்குணங்கள் முதலியன.
2. காணப்படும் இடங்கள்—பொது மாறுபாடுகள்.
3. இனங்கள்—வேற்றுமை, ஒற்றுமைகள்.
4. ஸ்வபாவம்—சிறப்புக் குணங்கள்.
5. வேட்டையாடும் வகைகள், பிடிக்கும் விதங்கள்.
6. உபயோகங்கள்]

ஈசனைப் பஜித்தல்.—முதலைக்குத் தண்ணீரின் மேல் மிதந்துகொண்டு ஸுகமாய் நீந்துவதற்கு ஆசையாயினும் வேட்டைக்காரர்கள் அதைத் தண்ணீரின்மேல் பார்த்தவுடன் சுடுதற்குக் குறிவைத்துப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். ஆகவே அது எப்பொழுதும் தண்ணீருக்குள்ளேயே யிருந்து அதனின்று வெளியே கிளம்பாமல் இருக்க வேண்டிருக்கிறது. அப்படி யிருந்தபோதிலும், எப்பொழுதாவது ஒருதக்க ஸமயம் கிடைக்கும்பொழுது, அது ஹூஸ்என்ற ஓர்வித சத்தத்துடன் மேலே எழும்பி அகன்ற நீர்ப்பரப்பின் மீது ஸுகமாய் நீந்திக் கொண்டிருக்கிறது. உலகமாகிய வலையிலே யகப்பட்டுக்கொண்டு தவிக்கும் மனிதனே, நீயும் ப்ரஹ்மாநந்த ஸாகரத்தின் மேல் நீந்தப்பார்க்கின்றாய். ஆனால் ஸம்ஸார தாபங்களின் போராட்டத்தினால் உன் உத்தேசம் பங்கமுற்றுப் போகின்றது. ஆனபோதிலும், உன்மனத்தை மாத்திரம் உற்சாகமாய் வைத்துக்கொண்டு கொஞ்சம் ஒழிவுகிடைக்கும் பொழுதெல்லாம் உள்ளன்புடன் ஈசனைப் ப்ரார்த்தித்து அவன் முன் உன்குறைகளையும் துக்கங்களையும் விண்ணப்பம் செய்வாயாகில், அவர் தக்கஸமயத்தில் உனக்கு முத்தியளித்து, நீ பேரின்பக்கடலிலே ஸுகமாக நீந்தி விளையாடக் கருணைகூர்வார்.

உபதேசரத்தினமாலை.

கம்போடியா பருத்தி

CAMBODIA COTTON

திருநெல்வேலி ஜில்லாவில் முன் தோட்டக்கால் நிலங்களில் பயிரிட்டு வந்த புகையிலை, கேழ்வரகு, மிளகாய் முதலாகிய இறவைப் பயிர்கள் செய்த இடங்களிலெல்லாம் 'கம்போடியா பருத்தி' யென்று சொல்லப்பட்ட பருத்திப் பயிர் இப்பொழுது வழக்கமாய் கையாடி சாகுபடி செய்கிறார்கள், இதன் காரணம் அந்தப் பயிரைச் சாகுபடி செய்தவர்களுக்கு நன்றாய்த் தெரியும். நில இயல்புக்குத் தக்கபடி நிலத்தின் மண்படை ஆழமாயிருந்தாலும், இல்லாமற்போனாலும், இந்தப் பயிர் சாகுபடி செய்வதில் பிடிக்கும் செலவெல்லாம், மாதம் ஒன்று அல்லது இரண்டு தண்ணீர் இறைப்பதைத்தவிர, மற்ற சாதாரண பருத்தி சாகுபடிக்கு எவ்வளவு செலவு பிடிக்குமோ அவ்வளவு தான் பிடிக்கும்.

சரியானபடி எருவிட்டுப் பருவப்படுத்திய நல்ல தோட்டக்கால் நிலங்களைப்போலொத்த நிலங்களில் இந்தப் பருத்தியை விளைவிக்கும் கிருஷிகருக்கு ஏகரா ஒன்றுக்குச் சாதாரணமாய் 1,000 முதல் 1,250 இராத்தல் நிறைவரை மாசூல் கிடைக்கிறதாம். சில விடங்களில் ஏகரா ஒன்றுக்கு 2,000 இராத்தல் நிறை மாசூல் கிடைத்திருப்பதாயும் தெரியவருகிறது. 250 இராத்தல் நிறைகொண்ட பொதி ஒன்றுக்குச் சாதாரணபருத்திக்குக்கிடைக்கும் விலையைவிட இந்தத் தினுசுப் பருத்திக்கு ஒரு பொதிமேல் ரூபாய் 5 ஜாஸ்தி விலை கிடைக்கிறது. இப்படி ஜாஸ்தி விலை கிடைப்பதின் காரணம் என்னவென்றால் இந்தப் பருத்தியிலிருந்து ஜாஸ்தி பஞ்சு கிடைப்பதுதான். சாதாரண பருத்தி 2,000 இராத்தல் நிறையை அரைத்தால் 500 இராத்தல் பஞ்சு கிடைக்கும். ஆனால் இந்தப் பருத்தியிலிருந்து 500 இராத்தல் நிறை பஞ்சு கிடைக்க 1,500 இராத்தல்

பருத்தி அரைத்தால் போதும். மேலும் திருநெல்வேலி ஜில்லாவிலிருக்கும் நூலாபீஸ் வியாபாரிகள் இந்தப் பருத்தி பாரம் ஒன்றுக்குச் சாதாரண பருத்தி விலையை விட ரூபாய் ஐந்து ஜாஸ்தி கொடுக்கிறார்கள்.

இந்தப்பயிரைச் சாகுபடிசெய்யும் முறை மிக எளிது. எருச்செய்த நீர்வடிவுள்ள தோட்டக்கால் நிலங்களில் நல்ல பலிதம் கிடைக்கும். இதை விதைக்கும் நிலத்தை நன்றாய் உழுது பண்படுத்தி, பருத்தி விதைக்கும் பட்சத்தில் விதையை கைவிதைப்பாய் வீசி கட்டைக் கலப்பையால் லேசாய் ஒரு சால் உழுது விதையை மறைக்கவேண்டும். ஒரு ஏகரா நிலத்தில் விதைக்க 10 இராத்தல் விதை போதுமானது. விதைவிதைத்த பிற்பாடு தண்ணீர் இறவைக்கு வேண்டிய பிரகாரம் பாத்திகளும் கால்களும் கட்டவேண்டும். பயிர் முளைத்து மேல் வந்து செடிகளில் இரண்டு இலைகள் உருவியிருக்கும் போது, கைக்களை வெட்டி நிலத்தின் மேல் பரப்பைக் கிளரிக் கொடுக்கவேண்டும். செடிகள் ஒருச்சாண் உயர மிருக்கும்போது ஒருச் செடிக்கும் மற்றொருச் செடிக்கும் இரண்டடி தூரமிருக்கும்படிச் செடிகளைக் கலைத்துவிட வேண்டும். நிலத்தில் தக்கபடி எருவிட்டிருந்தால் செடிகளுக்கு மத்தியில் $2\frac{1}{2}$ முதல் 3-அடி இடம்விட்டுக் கலைப்பிக்கலாம். இப்படிச் செடிகளைக் கலைப்பிக்காவிட்டால் செடிகள் அடர்ந்து நெருங்கி, அதன் கிளைகள் சிறுத்து கோனுருவி, சன்னமாகி, அவைகளில் பிடிக்கும் பருத்த காய்களின் பளுவைத் தாங்கமுடியாது. செடிகள் வளர்ந்து நிலத்தை அடைத்து மூடிக் கொள்ளுமுன் இரண்டாந்தரம் ஒருகளை வெட்டவேண்டும். இதற்குப்பின் செடிகளின் நிழல் நிலத்தை மூடிக்கொள்ளுமானதால், களைப் பூண்டுகள் வளரவொட்டாதபடி அடக்கிக் கொள்ளும். இந்தப் பயிருக்குத் தண்ணீர் அவசியமாக வேண்டிய பொழுது மாத்திரம் இறைத்தால் போதுமானது. செடிகளில் பிடித்திருக்கும் காய்கள் வெடிக்க ஆரம்பித்த பிற்பாடும், முதல்வெடிப்பு பருத்தி எடுத்தாகும் வரை தண்ணீர் பாய்ச்சக்கூடாது. அப்பால் காய்கள் காய்த்து ஓய்ந்துபோன செடிகளில் மறுபடியும் துளிர்த்துப் பூத்துக் காய்க்கட்டும் பொருட்டு ஜலம் இறைக்கவேண்டும். இந்தப் பருத்தியைச் செடிகளிலிருந்து எடுப்பது மிகவும் எளிது. ஏனென்றால் காய்கள் பெரிதாயும் சுளைகள் நன்றாய் வெடித்து மிருக்கும். பருத்தி எடுப்பதில் அனுபோகமுள்ள ஒரு ஆள் நாள் ஒன்றுக்கு 100 முதல் 125 இராத்தல் பருத்திவரைசாதாரணமாய் எடுக்கக்கூடும்.

தானியப் பயிர்களை நிச்சயமாய்ப் பயிரேற்றி பலனடையப் போதுமான தண்ணீர் வசதியில்லாத கிணற்றிறவை நிலங்களை வைத்துச் சாகுபடி செய்யும் ஒவ்வொரு கிருஷிகளும் இந்தப் பயிர் சாகுபடி செய்வது நிரம்ப நலம்.

எச். சி. ஸாம்ப்ஸன்,

ஆக்ரிகல்சர் டிப்டி டைரக்டர்.

உலகப்பற்று.—ஆகாயத்திலே அதிக உயரத்தில் ஸஞ்சரிக்கின்ற "ஹோமா" என்ற ஜாதியைச் சேர்ந்த பக்ஷிகள் அவ்வுயரமான ப்ரதேசங்களையே அதிக ஆசையோடு நேசித்து வருவதால் கீழே இறங்கி பூமிக்கு வரவேண்டுமென்னும் கருத்தே அவைகளுக்குக் கிடையாது. அவைகள் ஆகாயத்திலேயே முட்டையிடுவதால் அம்முட்டைகள் பூமியின் ஆகர்ஷண சக்தியால் இழுக்கப்பெற்று கீழே விழுந்து கொண்டிருக்கையிலேயே நடுவில் குஞ்சு பொரித்துக் குஞ்சுகளை வெளிப் படுத்துகின்றன. வெளியே வந்த குஞ்சுகள் தாங்கள் கீழே விழுந்து கொண்டிருப்பதை உடனேதெரிந்துகொண்டு, தங்களுக்கிருப்பிடம் ஆகாயம் என்பதை இயற்கையறிவால் உணர்ந்து தாங்கள் செல்லும் கதியை யுடனே மாற்றி, மேல்நோக்கிப்பறக்க வாரம்பிக்கின்றன. அவ்வாறே சுகதேவர், நாரதர், சங்கராசாரியர், இயேசு, முதலிய மஹான்கள் இளமையிலேயே இவ்வுலகப் பற்றையறுத்து உன்னதப்ப்ரதேசங்களாகிய மெய்யறிவையும், திருவருட்ப்பிரகாசத்தையும் நாடிச் செல்கின்றனர். உபதேசரத்னமாலை.

செல்வசாஸ்திரம்

THE SCIENCE OF WEALTH

நம் தேசத்தில் பல சாஸ்திரங்களில் பாண்டித்ய முடையவர்கள் அனேகருளர். அவர்களில் செல்வசாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்தவர் எவரேனுமுளரோ என்று விசாரித்தாலோ ஒருவரைக் கண்டுபிடிப்பது மகாதுர்லபம். ஏன் இப்படி நம் தேசத்திலிருக்க வேண்டும் என்று ஆராய்ந்தால் காரணம் புலப்படுகிறது. அதாவது நான்குவிதப் பலன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு இவைகளில் எப்பொழுதும் நம் முன்னோர்கள் அறம்,வீடு என்ற இரண்டையும் கடைப்பிடித்து உழைத்தார்களே தவிர, இரண்டாவதாகிய பொருளைத் தேடுவதிலோ, அதற்கு ஆதாரமாய் செல்வசாஸ்திரம் இயற்றுவதிலோ காலத்தைக் கழிக்கவில்லை. இப்பொழுதும் 'மேல்நாட்டார் பணப் பயித்யம் பிடித்தவர்,கீழ்நாட்டார் மதப்பயித்யம் பிடித்தவர்' என்ற வசனத்தைக் கேட்கலாம். இக்காலத்தில் அம்மாதிரியல்ல என்பது ஜப்பான் தேசத்துச் சரித்திரத்தை வாசித்தால் தெரிய வரும். ஆங்கிலேயரும் மற்ற ஐரோப்பியரும் இச்செல்வ சாஸ்திரத்தில் கரைகண்டவராயிருப்பதால் அவர்களிடமிருந்துதான் நாம் இந்த சாஸ்திரத்தின் நுட்பங்களை யறியவேண்டும்.

செல்வசாஸ்திரமென்றபதத்திற்குச் செல்வத்தைப்பற்றிய சாஸ்திர மென்றே யறியவேண்டும். அதாவது செல்வத்தைத் தேடுவது, தேடினதைப் பங்கிடுவது, பங்கிட்டதை யனுபவிப்பது ஆகிய இவைகளைப்பற்றி விவரித்துக் கூறும் நூல் செல்வசாஸ்திரமென்று சொல்ல வேண்டும். ஆகவே செல்வம் என்றாலோ பணம் மாத்திரமல்ல; ஆனால் எவைகளெல்லாம் மானிடர்களுக்குத் தேவையோ, அவைகளில் எவைகளெல்லாம் இனாமாய்க் கிடைக்கக் கூடாததோ அவைகளெல்லாம் செல்வம் என்ற பாகத்தைச் சேர்ந்தவைகள். பொதுவாக தேவையானவைகளெல்லாம் செல்வமே. இச்செல்வத்தைப் பின்வருமாறு பிரிக்கக்கூடும்,

சேல்வம்.

I. வஸ்துவைச் சார்ந்தது.
   (1) இனாமாய் எல்லாருக்கும் தெய்வம் கொடுத்தவை.
   (2) பாடுபட்டடையவேண்டியவை.

II. வஸ்து வல்லாதது.
   (1) வெளியிலுள்ள குணங்கள்.
   (2) உள்ளேயுள்ள குணங்கள்.

வஸ்துவல்லாத செல்வத்தைப்பற்றிச் சற்று விவரிப்போம்: ஏதாவது ஒருவன் நல்ல பலசாலியாயிருந்தால் அவனுக்கு மற்றொருவனைக் காட்டிலும் வேலைசெய்யுந் திறமையிருக்கக் கூடும். அப்படியிருந்தால் இப்பலசாலி பலஹீனனைக் காட்டிலும் செல்வத்தை யடைந்தவனாகக் கருதப்படவேண்டும். அல்லது ஒருவன் ஸங்கீதத்தில் வித்வானாயிருந்தால் அவனிடத்தில் ஸங்கீதமாகிய செல்வம் குடிகொண்டிருக்கிறது என்று ஊகிக்கவேண்டும். எவனொருவன் உண்மையைப் பேசுபவனாயிருக்கிறானோ அவனிடம் செல்வமிருக்கிறது. அல்லது ஒரு தேசத்திற்கு நிலவளப்பமும் நீர்வளப்பமுமிருந்தால் அத்தேசத்திற்குச் செல்வம் ஏராளமாயிருக்குமென்று எண்ணவேண்டும். ஆகவே ஐசுவரியமென்றால் அனேக வித வஸ்துக்களோ அல்லது குணங்களோ மானிடர்களுக்குப் பணம் சம்பாதிக்கக்காரணமாயிருப்பதெல்லாந்தான்.

சேல்வசாஸ்திரத்தின் நோக்கம்

செல்வசாஸ்திரம் சாதாரணமாய் நாடோடிக் காரியங்களில் சுபாவ புத்தியையுடைய மானிடர்கள் செய்யக்கூடிய விஷயங்களைக் கூறும் நூல். அதாவது எம்மாதிரி பொருளை யடைகிறானென்றும், அம்மாதிரி யடைந்த பொருளை எம்மாதிரி உபயோகிக்கிறானென்றும் கூறுகிறது. ஒவ்வொருவரும் தங்களால் இயன்றமட்டும் ஸரியான வழியில் பொருளைத் தேடவேண்டுமென்பது இச்சாஸ்திரத்தின் கோரிக்கை. ஆகவே இச்சாஸ்திரம் மானி வஸ்துவைப் டபற்றியது என்று

கூறவேண்டும். ஏனெனில் ஒவ்வொருவருடைய உலக நடத்தை அவரவர் சக்தி, அவரவர்க்குள்ள அனுகூலவஸ்துக்கள் இவைகளைப் பற்றியது. எனெனில் இவ்வுலகத்திலுள்ள நடவடிக்கைகளெல்லாம் மதஸம்பந்தப்பட்டது அல்லது செல்வத்தைப் பற்றியது என்று அனேக பண்டிதர்கள் வற்புறுத்திக் கூறுகின்றனர். எவ்விதமான வேலையாயிருந்தாலும் எல்லாவற்றிற்கும் உபகாரமாகப் பணங் கிடைப்பதுதான் மூல ஆதாரமாயிருக்கிறது. இக்காரணம்பற்றித்தான் இச்சாஸ்திரம் அஸாதாரணமான மனிதனையோ அல்லது உலக நடவடிக்கையல்லாத விஷயங்களையோ கவனிப்பதில்லை. உதாரணமாக, ஒருவன் எப்பொழுதும் தன் காலத்தைப் பரோபகார விஷயத்தில் கழித்ததால் வரும் பணப்பலனை யடையாமல் புண்ணியமென்றே கருதுவானுனல் அவனைச் ஸாதாரணமான மனிதன் என்று இச்சாஸ்திரங் கருதாது. அல்லது மனிதர்களுக்கு உபபோகமில்லாத வஸ்துக்களை ஒருவன் செய்தால் அவனையும் இச்சாஸ்திரம் கவனியாது. ஆகவே நாம் நல்ல சுபாவமுள்ளவர்களையும் எல்லாருக்கும் உபயோகப்படக்கூடிய வஸ்துக்களையும் பற்றி விசாரிக்கவேண்டுமே யல்லாது மற்றவர்களையும் இதர வஸ்துக்களையும் கவனிக்கவேண்டியதில்லை.

உட்பிரிவுகள்

(1) செல்வ சம்பாத்யம்.—இப்பிரிவில் செல்வத்தைக்கொடுக்கக்கூடிய நிலங்களையும், பாடுபடவேண்டிய உழைப்பையும், இவ்வுழைப்புக்கு ஸாதனமாயிருந்து அதிகப் பணத்தைக் கொடுக்கக்கூடிய மூலதனத்தையும், எம்மாதிரி நிலம், உழைப்பு, மூலதனம் இம்மூன்றுஞ் சேர்ந்து அதிக தனத்தைக் கொடுக்கிறதென்பதையும் பற்றி விவரித்துக் கூறப்படும்.

(2) செல்வத்தைப் பங்கிடுதல்.—இப்பிரிவில் கூறவேண்டியதாவது: ஒரு தேசத்தில் பணம் எம்மாதிரி பங்கிடப்படுகிறது? எவருக்குப் பங்கிடப்படுகிறது? என்பது மாத்திரமல்ல. உலகத்திலுள்ள எல்லா தேசங்களையும் ஒன்றுசேர்த்துக் கவனித்து இவ்வுலகத்திலுள்ள ஸொத்து எம்மாதிரி எவரெவர்களுக்குப் பங்கிடப்படுகிறதென்பதைப் பற்றியது. அது காரணம்பற்றி இப்பிரிவில் 'லேவாதேவி,' நாணயம், வெளி வியாபாரம் இவைகளைப்பற்றி விஸ்தாரமாய் எழுதவேண்டும். இப்பிரிவில் ஸர்க்கார் வரியையும்பற்றிச் சொல்லப்படும்.

(3) செல்வத்தின் பயன்.—இவ்வுலகத்திலுள்ளவர் எம்மாதிரி செல்வத்தை உபயோகிக்கிறார்களென்று கூறும் பிரிவு. இப்பிரிவில் அம்மாதிரி உபயோகிப்பதால் வரும் பலன்களைப் பற்றி விவரிக்கப்படும்.

இந்நூல் எவ்வகையைச் சார்ந்தது என்பதை ஆராயுங்கால் இந்நூலின் குணகுணங்கள் நன்ருய்ப் புலப்படும். இவ்வுலகத்திலுள்ள நூற்களைப் பின்வருமாறு பிரிக்கக்கூடும்.

நூல் அல்லது அறிவு

I. இயற்கை நூல் (வான நூல், ரசாயன நூல் முதலியன.

II. மானிட நூல்.

(1) மனிதனைப்பற்றியவை.

(i) தர்க்கம்.

(ii) மானஸ நூல்.

(iii) நன்னடக்கை.

(2) ஸமூக நூல்.

(i) ராஜாங்க நூல்.

(ii) மத நூல்.

(iii) செல்வ நூல்.

ஆகவே இச்செல்வநூல் மானிடநூலில் மனிதக்கூட்டத்தைப் பற்றிய நூலில் ஒன்றாயிருக்கிறது. சிலர் இந்நூலை ஒரு சாஸ்திரமாகக் கருதலாமோ கூடாதோ என்று ஸந்தேகிக்கின்றனர். அம்மாதிரி ஸந்தேகிக்கின்றவர்களுக்குச் சொல்வதாவது: எம்மாதிரி அறிவில் சில பிரமாணங்களும் நியாயங்களும் தலைப்பட்டு வாக்குவாதத்திற்கு சரியாயிருக்கிறதோ அவையெல்லாம் நூலென்றே கருதப்படவேண்டும். ஆனல் சில இடங்களில் இந்

நூலில் வேலைத்திறமை பாகங்கள் அடங்கி யிருக்கக்கூடும். அப்படியிருந்த போதிலும் பெரும்பான்மையாய் சாஸ்திர ரீதிப்படி யிருப்பதால் சாஸ்திரமென்றே கூறவேண்டும். இக் காரணம்பற்றிதான் இச்சாஸ்திரம் செல்வத்தை எம்மாதிரி செலவழிக்க வேண்டும், செலவழிக்கக் கூடாது என்று கூறுமல் இம்மாதிரி செலவழிப்பதற்குள்ள நியாயங்களை யெடுத்துக் காட்டும்.

இந்நூலின் ஆராய்ச்சியில்லாமல் ராஜ்யபரிபாலனம் கூடாது; ஏனெனில் உழைப்பாளிகளைப் பற்றிக் கவனிப்போமானுல் இந்நூலில் சம்பந்தமான அவர்கள் கூலியைப்பற்றிக் கவனிக்க வேண்டும், அல்லது ஸர்க்காருக்குவரும் வருமானத்தை யோசித்தால் இந்நூலில் முக்கிய பாகமாகிய வரிபோடுதலைப்பற்றிக் கவனிக்கவேண்டும். ஆகவே இந்நூலில் பாண்டித்யம் ஒவ்வொருவருக்கு மிருந்தே தீரவேண்டும். வியாபாரிகளுக்கு அதிக உபயோகமுள்ளது. இந்நூலை எம்மாதிரி நாமெல்லாரும் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதைப்பற்றி அடுத்த பத்திரிகையில் விவரிப்போம்.

V. G. சுப்பய்யாவய்யர், B.A., L.T.

சரீரம் நிலையற்றது.—மானுட சரீரம் ஒரு கொதிக்கும் பாண்டத்தைப்போன்றது; மனதும் இந்திரியங்களும் அப்பாண்டத்திலேயுள்ள நீர், அரிசி, உருளைக்கிழங்கு முதலியவற்றைப் போன்றவை. இப்பதார்த்தங்களுடன் மேற்படி பாண்டத்தைத் தீயின்மேல் வைத்து, சற்றுக்கழித்து அதைத் தொட்டால், அது நம் விரல்களைச் சுட்டுவிடுமவ்வளவு சூடாயிருக்கும். ஆனல் அச்சூடு பாண்டத்தையாயினும் அதிலுள்ள பதார்த்தங்களையாயினும் சேர்ந்ததன்று. அது தீயினுடையதே. அதுபோலவே மனிதனுக்குள்ளேயிருக்கும் பிரும்மமேனும் அக்னியே மனத்தையும் புலன்களையும் அவற்றின் தொழில்களைச் செய்யுமாறு ஏவுகின்றது. அவ்வக்னி வேலை செய்வதை நிறுத்திவிட்டால், புலன்களும் மற்றைக் கருவிகளும் தத்தம் தொழிலை நிறுத்தி விடுகின்றன.

உபதேசரத்னமாலை.

கீழ்ப்படிதல்
OBEDIENCE

கடவுள் ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் புரிகின்றனர். இதனை எவ்வளவோ ஸாமர்த்தியமாயும், நடுவு நிலைமை வழுவாமலும், கைம்மாறு கருதாமலும் செய்கின்றனர். நாம் பிறக்கும் போதாகட்டும் இறக்கும்போதாகட்டும் இருக்கும்போதுள்ள ஆடம்பர ஐசுவரிய விசேஷ சின்னங்களொன்றும் உடன்வரக்காணோம். ஸகலமும் உடலும் உயிரும் கூடிவாழும் கண்ணிமைப் பொழுதே தான். இதற்குள் நாம் செய்யும் தொழில்கள் முக்கியமாய் மூன்றுடைத்து. அவையாவன: உண்ணல், உடுத்தல், படுத்தல். இவற்றையே ஏழைமுதல் அரசன் ஈருகவுள்ள பிரதியொரு மனிதனும் கருத்திற்கொண்டு தனது சக்தியானுஸாரத்திற் கியைந்தபடி பாடு படுகின்ருன். அப்படிப் பாடுபட்டுச் சித்திபெறுவது அவனவன் தேகமனேபலன், அதிர்ஷ்டம், அதாவது ஈச்வரஸங்கல்பம், முதலானவற்றைப் பொறுத்திருக்கின்றது. இத்துடன் இன்றியமையாததொன்றுண்டு. அஃதென்னை யெனின் கீழ்ப்படிதலேயாம். தனிகன் தரித்திரனுவதும், சிறியன் பெரியனுவதும் இதனைப் பொறுத்திருக்கின்றது.

கீழ்ப்படிதலுள்ள விடத்தில் ஸமாதானம் தழைத்திலங்கும். கணவன் சொற்படி காதலி நடப்பதும், பெற்ருேர், பெரியோர், எஜமானர், ஆசிரியர் சொற்படி பிள்ளைகள் நடப்பதும் ஓர் நேர்மையான காட்சி.

நாம் தெருக்களில் செல்லுங்கால் எதிர்ப்படுவோரை விட்டு விலகிச் செல்வதும், ஸமுத்ர ஸ்நானஞ் செய்யும்போது ஆர்க்கும் அலையைக் கண்டு நீர்க்குள் ஆழ்வதும், தாழ்ந்த விடத்தில் குனிந்து செல்வதும், பெரியோர் இட்ட கட்டளையைப் பிரியமாய்ச் செய்வதும் கீழ்ப் படிதலேயாகும். கீழ்ப்படிவோரைத் தினையளவுந் தீமை யணுகாது.

ஆற்றில் பெருகிவரும் வெள்ளத்தைக் கண்டு தலை சாய்ந்து நிற்கும் செடி, கொடிகள், வெள்ளந் தணியவே உள்ளங்களிக்க மேலெழுவதைப் பாருங்கள். இவ்விஷயத்தில் ஹிந்துக்கள் சிரேஷ்டமானவர்களே. அவர்கள் ஜாதி, மதம், ஆசாரம், கல்வி ஸகலமும் இதை வற்புறுத்திக் கூறுகின்றன. இவர்கள் இயற்கையாய்க் கீழ்ப்படியும் சுபாவமுடையவர்கள்.

பல தூரதேசங்களுக்குச் சென்று பரதேசிகள்கீழ் நம்மவர்கள் வேலைசெய்து பிழைப்பதும் அன்னிய அரசாங்கத்தில் யாதொரு வசையுமின்றி நாம் வேலை செய்வதும் போதிய சான்றாகும்.

கீழ்ப்படிதலில்லாவிடத்து நம்மை ஆண்மையற்றவர்களென்று பிறரெண்ணலாகு மெனக் கூறலாகாது. பெரும்புயல் வீசுகையில் கீழ்ப்படிய முடியாதவைபோன்று நிமிர்ந்து பரந்தோங்கி நிற்கும் மரங்கள் படும் பாட்டைப் பாருங்கள்.

இக்காலத்தில் கலாசாலைகளிற் பயிலும் மாணவர்களிற் பலர் வரவர கீழ்ப்படியும் தன்மை யற்றவர்களாய் வருவது மிகவும் விசனிக்கத்தக்கதாகும். "ஸகலரும் ஸமானர். ஒருவரை மற்றொருவர் கீழ்ப்படிதலேன்?" என்ற வாதம் மேலோங்குகின்றது. இஃதோர் விபரீதகாலம். மனிதர்கள் கூடிவாழும் ஸ்வபாவமுடையவர்கள். கூடிவாழுமிடத்து பொதுஜனநன்மையைநாடி அரசாங்கமொன்று வேண்டும். அரசாங்க மொன்றிருக்குமிடத்து அரசனோ, அமைச்சர்களோ, அதற்கான அதிகாரிகளோ வேண்டும். அதிகாரிகளிருக்குமிடத்து அவர்கள் சொல்வதை அங்கீகரித்து நடக்கவேண்டும், அங்கீகரித்து நடக்க இராஜ விசுவாஸமும் கீழ்ப்படிதலும் வேண்டும். கீழ்ப்படிந்து நடக்க நல்ல கல்வியும் ஸஹவாஸமும் வேண்டும். "ஒவ்வோர் இலமும் சிறியதோர் அரசே."

S. சுப்பிரமணிய அய்யர்

தொழிற்கல்வி

TECHNICAL EDUCATION

நமது தேசமான இந்தியாவானது, பூர்வகாலங்களில் வியாபாரம், தொழில் முறைகள் இவைகளில் மிகப்பிரஸித்தி பெற்றிருந்தாலும் கூட, இப்பொழுது சிலகாலமாக வியாபாரத்தில் க்ஷீணதசையை அடைந்திருக்கிறது என்றது எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. இந்த க்ஷீண தசையை அடைந்ததற்குக் காரணங்கள் என்னவென்று சற்று யோசித்துப் பார்ப்போம். இந்தத்துக்ககரமான ஸ்திதிக்கு அநேக காரணங்கள் இருந்தபோதிலும், அதன் முக்கிய காரணம் பின் சொல்லப் போகிறதுதான். இந்தியாவில் பண்டைக்காலம் தொட்டு கைத்தொழில்கள்எல்லாம் மிகபிராசீனமான இயந்திரங்களின் உதவியோடு செய்யப்பட்டு வருகின்றன. உதாரணமாக—நாம் துணி நெய்வதை எடுத்துக்கொள்ளுவோம். இப்பொழுதுகூட நாம் கிராமங்களுக்குப் போய்ப் பார்ப்போமேயானால், தலைமுறைத்தத்துவமாக உபயோகப்படுத்தப்பட்ட தறியைக்கொண்டே துணி நெய்து வருவதைப் பார்க்கலாம். இந்தத் தறியில் நெய்கிற வேலையானது மிகவும் சிரமமானதோடுகூட, ஒருநாள் வேலைக்கு ஏதேனும் 2, 3-துணிகள் நெய்யப்பட்டால் ஜாஸ்தியென்று சொல்லவேண்டும். இம்மாதிரி நம்மவர்கள் அநேக கைத்தொழில்களைப்பிராசீனமான இயந்திரங்களோடு, பிராசீனமுறைகளையே அனுசரித்துச் செய்துவருகிறார்கள்.

இது இப்படியிருக்க, மேல்நாடுகளைச்சற்றுக் கவனிப்போம்: 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் அநேகர், நூதனமான யந்திரங்களும், நூதனமான தொழில் முறைகளும் கண்டுபிடித்தார்கள். வாட் (Watt) என்கிறஒரு ஆங்கிலேயர் நீராவியைக்கொண்டு வேலைசெய்யக் கண்டுபிடித்ததோடு வண்டியை யிழுக்கும் கருவியாகவும் அதனை உபயோகப்படுத்தினர்.

ஆர்க்ரைட் (Arkwright) என்றஇன்னொரு ஆங்கிலேயர் துணிநெய்வதற்காக ஒரு நூதனமான யந்திரம்ஒன்றுசெய்து, அதன்உபயோகத்தைத் தன் தேசத்து ஜனங்களுக்குத் தெரிவித்தார். இந்தஇயந்திரமானது சொற்பகாலத்தில், அநேகம் தறிகள் சேர்ந்துநெய்யும் துணியைநெய்து விடும். இதேமாதிரிஒவ்வொருகைத்தொழிலும், நீராவி, மின்சாரம் இவைகளைக்கொண்டு நடத்தப்படும் இயந்திரங்களின் உதவியினால், மேல்நாட்டார்கள் சிறுபணத்தோடு, மிகச் சுலபமாக, நம்மவர்கள் வருஷக்கணக்காகக் கஷ்டப்பட்டுச்செய்யும் வேலையைச் சிலநாள்களில் செய்துவிடுகிறார்கள். ஆகையால் அவர்கள் தங்கள் சாமான்களை மிகச் சுலபமான விலைக்கு விற்கிறார்கள். ஆனால் நமது தொழிலாளிகளோ, நவீனமுறைகளை அனுசரிக்காததனால், தங்கள் கைத்தொழில் பொருள்களை உயர்ந்த விலைக்கே விற்கவேண்டி யிருக்கிறது. கடைகளில் ஒரே பொருளை இரண்டுபேர் ஒருவன் குறைந்த விலைக்கும், மற்றொருவன் உயர்ந்த விலைக்கும் விற்றால் ஜனங்கள் குறைந்த விலை சொல்கிறவனிடத்தில்தான் வாங்குவார்கள். இப்படி நம் தொழில்களெல்லாம் ஒவ்வொன்றாக, காலக்ரமேண, மேல் நாட்டாரின் போட்டியால் க்ஷீணித்தும், அநேகம் நசித்தும் போய்விட்டன.

இப்பொழுது நம்தேசத்துக் கைத்தொழில்களை மறுபடியும் நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவருவதெப்படியென்று எல்லோரும் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் அவரவருக்குத் தோன்றினபடியெல்லாம், இப்படிச்செய்தால்கைத்தொழில்கள் முன்னுக்குவரும், அப்படிச்செய்தால் முன்னுக்குவரும் என்று சொல்கிறார்கள். ஆனால் ஒன்றுமாத்திரம் நிச்சயம். நாம் இந்தமாதிரி தறி முதலான பண்டைக்காலத்து இயந்திரங்களையும் முறைகளையும் விடாமல், நான் என் பாட்டன் முப்பாட்டன் தொழில் செய்தபடிதான் செய்வேன் என்று உட்கார்ந்திருந்தால், நம்கைத்தொழில்கள் முன்னுக்குவரவே வராது. ஆகையால் மற்ற தேசங்களில் அனுசரித்துவரும் நவீன கைத்தொழில் முறைகளை கற்றுவரும்படி நம் சிறுவர்களை அத்தேசங்களுக்கு அனுப்பி, அவைகளை நாம் அனுசரிக்கவேண்டும்.

இதற்காகத்தான், கல்கத்தாவில் "இந்தியக் கைத்தொழில்சாஸ்திரீயசங்கம்"(Indian Industrial and Scientific Association) என்றஒரு சங்கமானது, வருஷா வருஷம் நல்லபடிப்புள்ள சிறுவர்களை இங்கிலண்டு, பிரான்ஸ், ஜெர்மெனி, அமெரிக்கா, ஜப்பான்முதலான தேசங்களுக்கு நவீன கைத்தொழில் முறைகள் கற்றுவரும் பொருட்டு அனுப்புகிறது. கல்கத்தாவில்நடப்பதைப்பார்த்து, சென்னைப்பட்டினத்தில்கூட சில பிரமுகர்கள்சேர்ந்துஜனங்களிடம்பணம்வசூல் செய்து, நாஷனல் பண்டு (National Fund) என்று ஒரு பண்டு ஏற்படுத்தி அதன் வரும்படியிலிருந்து வருஷா வருஷம், சில சிறுவர்களை மேற்சொன்னதேசங்களுக்குத்தொழில்முறைகள் கற்கும்பொருட்டு அனுப்பிவருகிறார்கள்.

அநேக காலமாக நம்தேசத்தில், கைத்தொழில் செய்வதற்குப் படிப்பு வேண்டியதில்லையென்று ஒருதப்பான அபிப்பிராயம் இருந்துவருகிறது. இந்தத் தப்பபிப்பிராயமே நம் தொழில்களுடையக்ஷீணதசைக்கு முக்கிய காரணம். மேல்நாடுகளில் கைத்தொழில் செய்யப்போகிறவன்கூடகட்டாயம் அந்தந்தத்தொழில் முறைகளை அறிவதற்காக, அவைகளைநன்றாகப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றே, ஒவ்வொரு தொழிலுக்கும், டெக்னிகல்(Technical) ஸ்கூல்களும் காலெஜுகளும், ஸர்வகலாசாலைகளும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. சிலவருஷங்களாகச்சாதாரணவியாபாரம், வியவசாயம்இவைளுக்குக்கூடஸ்கூல்களும்காலெஜுகளும் ஏற்படுத்தி வருகிறார்கள். ஆகவே நம் தேசக் கைத்தொழில்கள் மறுபடியும் நல்ல ஸ்திதிக்கு வரவேண்டுமானால், நம்மவர்கள் தொழில்செய்வதற்குப் படிப்புவேண்டியதில்லையென்றதப்பபிப்பிராயத்தைவிட்டு, ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு கைத்தொழிலுக்கும் டெக்னிகல் ஸ்கூல்களும், காலெஜுகளும் ஏற்படுத்தி, நம் சிறுவர்களுக்கு நவீன கைத்தொழில் முறைகளை சொல்லிக்கொடுக்கவேண்டும்.

குறித்தகாலம் தவருமை

PUNCTUALITY

இந்தியர்களுக்கும் ஐரோப்பர்களுக்கும் உள்ள வித்தியாசங்களில் முதன்மையானது இதுதான். ஒரு இந்தியன் சாயுங்காலம் ஐந்து மணிக்கு ஒரு காரியம் செய்கிறதாக ஒப்புக் கொண்டால் அக்குறித்த காலத்தில் அதை செய்துமுடிப்பது அபூர்வம்தான். ஆனல் ஒரு ஐரோப்பியன் குறித்த காரியத்தைக் குறித்த நேரத்தில் செய்கிருன்.

ஸாதாரணமாக நாம் எல்லோரும் பெரும் வேதாந்திகளாக இருக்கிறோம். இப்பொழுது செய்தால் என்ன, பிறகு செய்தால் என்ன, எப்படியாவது காரியம்தானே முடியவேண்டும் என்று நம்முள் ஒவ்வொருவரும் சொல்லுகிருர்கள்.

இப்படி நம் பெரியோர்கள் இருந்தார்கள் என்று சொல்லவே முடியாது. ஏனெனில், அவர்களுக்கு ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வேலே உண்டு. அதைக் கட்டாயம் செய்துதான் தீரவேண்டும். நமக்கும் அதே மாதிரி கட்டுப்பாடுகள் இருந்தும் நாம் அதிகப் படித்தவர் என்று நினைத்துக்கொண்டு எல்லாவற்றையும் விட்டுவிட்டோம். இப்பொழுதோ எந்தக் காரியத்திற்கும் செய்தாலென்ன, செய்யாவிட்டாலென்ன என்று தனக்கு எட்டின மட்டில் விசாரித்துப் பிறகு ஒரு தீர்மானத்துக்கு வருகிறோம். வந்தபோதிலும் நம் தீர்மானத்தை நாம் அநுசரிக்க முடியவில்லே. எதுவும் ஆரம்பமுதல் அநுபவம் இருந்தால் தான் நல்லது. அது இல்லாமையால் தான் நமக்கு பழக்கமின்மையால் குறித்தகாலத்திலொன்றைச் செய்வது மிகவும் கஷ்டமாய் விடுகிறது.

திருஷ்டாந்தமாக ஒவ்வொருவரும் காலேயில் எழுந்திருக்கவேண்டுமென்று விதி இருக்கிறது. இதை நாம் ஆரம்பமுதல் அநுசரிக்கிறது இல்லே. நமக்குப் பகுத்தறிவு வந்தபிறகு காலேயிலெழுந்திருத்தல் நல்லதென்று நமக்கு நன்கு விளங்குகிறது. பகுத்தறிவு வந்தபோதிலும் நாம் மனம்போன வழியில் நடந்துவந்த கொடிய பழக்கத்தினுல் அதைத் தள்ளிவிட்டு புதியதாகிய வழியைக் கைக்கொள்வது மிகவும் அஸாத்யமாய் விடுகிறது. அப்யாஸம் புதிதாய் உண்டாவது கஷ்டமாயினும் நமது மனத்தின் வழியே செல்லாது மனத்தை நம் வழிப்படுத்தி தகுந்த வழியில் பயில முயற்சிக்கவேண்டும். இல்லாவிடில் பகுத்துணர்வடைந்ததின் பயன் என்ன?

நாம் குறித்தகாலம் தவறின் அதனுல் நமக்கு விளேயும் கெடுதல்கள் பல உள. அநேக வியாபாரிகள் ஒரு நிமிஷம் தாமதமாய்ப்போய் தம் முதல்களே இழந்திருக்கிருர்கள். அநேகர் கொஞ்சம் தாமதமாய்ப்போய் ரயிலில் ஏறத் தவறியிருக்கிருர்கள். ஸாதாரணகாரியங்களில் காலதாமதமானுல் அதிக குற்றம் அல்லாமல் போனபோதிலும் அதே அப்யாஸம் உண்டாகும் ஆனதால் எப்பொழுதும் எல்லாக்காரியத்தையும் குறித்தகாலத்தில் செய்துமுடிக்க வேண்டும்.

அசட்டையாக நாளேக்குச் செய்வோம் என்று தள்ளிவைத்தால், நாளே நாளேயென்றே போய்க் கடைசியில் அந்தக்காரியத்தைச் செய்யாமலே போகிறோம். "சோம்பர் என்பர் தேம்பித் திரிவர்" என்றுர்போல காலதாமஸத்தால் விளேந்த கேடுகளே எண்ணி எண்ணி பின் மனம் புண்ணுவர் என்பது நிஸ்சயம். ஆகையால் நாம் எந்தக் காரியத்தையும் அதன் குறித்தகாலத்தில் கட்டாயம் செய்து முடிக்கவேண்டும். இல்லாவிட்டால் நமக்கு மிகவும் கஷ்டமும் நஷ்டமும் உண்டாகும் என்பதில் கொஞ்சமேனும் தடையில்லே.

இராஜம் அய்யர் அபிப்பிராயங்களும் குறிப்புகளும்

RAJAM IYER'S OPINIONS AND REVIEWS

I. புத்தமதம்

டாக்டர்பால்காரஸ் என்பவரால் செய்யப்பட்ட புத்நர் ஆனந்த உபதேசங்கள் என்ற புத்தகத்தைப்பற்றிக் குறிப்புஎழுதுங்கால் அதைச்சிலாகித்துவிட்டு புத்தமதத்திற்கும் அதன் தாய் மதமாகிய ஸனாதன தர்மத்திற்கும் உள்ள ஸம்பந்தத்தைப்பற்றிக் கூறப்புகுங்கால் மாத்திரம் பால்காரஸ் என்பவர் தமது அறியாமையை வெளிப்படுத்துகிறார் என்று கூறி அதைப் பின்வருமாறு சீர்திருத்த முயன்று ஸனாதன தர்மத்திற்கும் புத்தமதத்திற்கும் உள்ள ஸம்பந்த விஷயங்களை இராஜம் அய்யர் பின் வருமாறு எடுத்து விஸ்தரிக்கிறார்.

'புத்தமதம் வேதாந்த சாஸ்திர நோக்கத்திற்கு முரணாகக் கிளம்பிய ஓர் கிளர்ச்சி என்று மதிப்பது முழுத்தவறே. ஆழ்ந்து யோசிக்கின் இது வேதாந்தத்தின் ஓர்பாகம் என்பது வெளியாகும். வேதாந்த சாஸ்திரத்தின் சிறந்த உண்மைகளுக்குப் பதிலாக எல்லோரிடத்தும் காணப்பட்ட இழிவானதாயும், தாழ்ந்ததாயும், ஸாரமற்றதாயும் உள்ள கர்மங்களை நீக்கி ஒழுங்குபடுத்தும் தொழிலைக் கைக்கொண்டதே இம்மதம். கொடிய யாகங்கள், கஷ்டஹேதுவான வர்ண ஆசிரமவிதிகள், குழப்பமுண்டாக்கக் கூடியகர்மங்கள் ஆகியஇவைகளையே ஸனாதன தர்ம விஷயங்களில்ஜனங்கள் அதிகமாகப் பின்பற்றிக்கஷ்டப்பட்ட காலத்தில் உபநிஷத்துக்களின் நன்னடக்கையைப்பற்றிய பாகங்களை வெளிப்படுத்தி வற்புறுத்தி ஜனங்களைக் காப்பாற்றிய விஷயத்தில்தான் புத்தரது சிறப்பு அடங்கியுள்ளது. காலம் முதலிய மற்றையவைகளின் கொடுமையால் ஸனாதன தர்மத்தைப் பின்பற்றுவோருக்கும் அவர்கள் ஆதாரமாகிய உபநிஷத்துக்களுக்கும் உள்ள ஸம்பந்தம் அற்றுப்போக அதை மறுபடியும் புத்தர் உண்டாக்கிவைத்து நமது மதத்தைப்பரிசுத்தப்படுத்தினார். அவரது கொள்கைகள் கர்மயோகத்தின் ஓர் பாகத்தையும், ராஜயோகத்தில் சில பாகங்களையும் அடக்கியுள்ளன. புத்தமதத்தில் பக்திக்கு இடமே இல்லை. ஞானமோ அதனால் அதிகமாக மதிக்கப்படவில்லை. பொது மதமாக நிலைபெறுவதற்கு வேண்டிய ஸாரபாகங்கள் புத்தமதத்தில் இல்லை என்பதை பிற்காலத்தில் புத்தர் கொள்கையை மஹாயானம் (பலர் பின்பற்ற வேண்டிய கொள்கைகள்) என்ற கொள்கையால் பலப்படுத்தும்படி நேரிட்டது நன்றாக வெளிப்படுத்துகின்றது.

பால்காரஸ் என்பவர் வேதாந்த சாஸ்திரப்படி ஆத்மா இன்னது என்பதை நன்கு உணராதது அநேக தவறுகளுக்கு இடங்கொடுத்துவிட்டது. அவர், 'புத்தமதம் எக தெய்வ மதம். மனிதன் உயிர் ஆத்மா, மனஸ் என்ற இருவித வஸ்துக்களால்ஆகியது என்று அது கூறுவதில்லை' என்று தமது அபிப்பிராயத்தை யோசிக்காது வெளியிடுகிறார். புத்தமதம் வேதாந்த சாஸ்திரத்தைப் பின்பற்றியதால்தான் ஏகதெய்வ மதமாயிற்றேயொழிய அதற்கு விரோதமாக இவ்வாறாகவில்லை. வேதாந்தசாஸ்திரம் எந்த ஸந்தர்ப்பத்திலும் மனிதன் உயிர் ஆத்மா, மனஸ் என்ற இரண்டு வஸ்துக்களால் ஆகியது என்று கூறவேயில்லை. உண்மை வஸ்துவாகிய ஆத்மா அறியாமையில் பந்தப்பட்ட காலத்தில் மனஸ் ஆகவும், அதிலிருந்து விடுபட்டக்கால் ஆத்மாவாகவும் உள்ளது. பந்தப்பட்டதாகப் பாவனை செய்யும் பிரஞ்ஞையே மனஸ், இந்தப்பாவனை நீங்கிய காலத்தில் அதுவே ஆத்மா. ஆத்மா என்பது, பால்காரஸ் கூறுவதுபோல், மனிதனது தேஹ இந்திரிய மனவியாபாரங்களுக்கு அதிபதியாக இருக்கும் அகங்காரியான ஜீவாத்மாவல்ல, அஞ்ஞானத்திலிருந்து விடுபட்ட பிரஞ்ஞையே. மற்ற விஷயங்களில் மிக நேர்த்தியாக இருக்கும் இப்புத்தகத்தில் அங்கும் இங்கும் முற்கூறிய முக்கிய வேதாந்தக்கொள்கை விஷயமான அறியாமை வெளியாகி அதன் அழகு குன்றும்படி செய்கின்றது. பொதுவாக இப்புத்தகம் பல மதங்களது மூலக் கொள்கைகளை நன்கு எடுத்துக்காட்டிப் பலராலும் மறக்கக் கூடியதாகிய நன்னடக்கை விஷயத்தைப் புத்தர் நன்றாகவற்புறுத்தின விதத்தை மிகச் சிறப்பாக வர்ணிக்கின்றது.

II. பிரச்னோத்தரம்

ஷோலாபூர் ஜில்லா ஸங்கோலா என்ற இடத்தில் இருந்த ஜி. பி. லகேட் என்ற ஸப் ஜட்ஜி, ராஜம் அய்யர் இயற்றிய பிரபுத்த பாரத விஷயங்களை மிகுந்த ஆவலுடன் படித்துவந்த காலத்தில் தமக்கு

உண்டான ஸந்தேகங்களைப் பின்வரும் கேள்விகளில் வெளியிட்டார்.

1. கர்மத்தில் மனிதனுக்கு எவ்வாறு, ஏன் பிரவர்த்தி உண்டாயிற்று?
2. இது மனிதனுக்கு ஸ்வாபாவிகமா?
3. அல்லது இது வெளிப் பிரபஞ்சத்தோடு அவனுக்கு ஏற்படும் ஸம்பந்தத்தால் உண்டாவதா?
4. இது உபாதியா, குணமா?
5. வெளிப்பிரபஞ்ச ஸம்பந்தத்தால் மாத்திரம் இந்தப் பிரவர்த்தி உண்டாகிறதானால் இது ஏன் ஸ்வரூபத்திலும் அளவிலும் மாறுபட்டு ஜனங்களுள் காணப்படவேண்டும்?

இக்கேள்விகளுக்கு ராஜம் அய்யர் பின்வருமாறு பொதுவாக விடையளித்தார்.

ஆழ்ந்து யோசிக்குங்கால் பேதபுத்தியும் அதனால் உண்டாகும் கிஞ்சிக்ஞபுத்தியும் ஆகிய இவைகளே கர்மத்தில் மனிதனுக்குப் பிரவர்த்தி உண்டாகச்செய்யும் அந்தரங்க முக்கிய காரணங்கள். 'எங்கு ஞானிக்கு ஜீவன் என்ற பேதபுத்தி லேசம் உண்டாகிறதோ உடனே உண்மை நிலைபுரண்டு அடிசறுக்கி விடுகிறது; இதனால் கீழே புரண்டுகொண்டு வந்து விசித்திரப் பிரபஞ்சத்தோற்றம் வரையில் ஞானி வந்துவிடுவான்' என்று முன்னரே கூறியுள்ளது. இதிலிருந்து பேதபுத்தியே மனிதனுக்கு ஸ்வாபாவிகமான சலனத்தையும் அனாத்ம பேதத்தையும் முக்கியமாக உண்டாக்குவது என்பது தெரியவரும். ஜீவாத்மாவுக்கு அனாத்மபேதங்களுடன் ராகத்வேஷாதிகள் உண்டாகக் கர்மப்பிரவிருத்தி அதிகரிக்கிறது. இதைத்தான் பிரஹதாரண்யக உபநிஷத்தில் 'எங்கே பேதம் மதிக்கப்படுகிறதோ அங்கேதான் ஒருவன் மற்றொன்றைப் பார்க்கிறான், மற்றொன்றைக் கேட்கிறான்.........' (4-5-15). மனிதனுக்குக் கர்மத்தில் உண்டாகும் பிரவிருத்தி இவ்வாறு ஸ்வாபாவிகமே. இதுவும் அல்லாமல் இது வெளிப்பிரபஞ்ச ஸம்பந்தம் மேலிடுவதால் அதிகமாகவும் வளரும் தன்மை உடையது. ஜீவபேத புத்தியால் பிரபஞ்சம் உண்டாவதால் இது வெளிப்பிரபஞ்ச ஸம்பந்தத்தால் ஸ்ருஷ்டிக்கப்படுவதல்ல. இப்படி இருப்பினும் பிரபஞ்சமும் ஜீவனும் பரஸ்பரம் தாக்கும் ஸ்வபாவமுடையன. இதை விளக்க ஓர் உதாரணம் எடுத்துக் கொள்ளுவோம்: நாம் ஓர் நாற்காலியை பார்க்கிறோம். அது மரமே ஒழிய வேறல்ல, நாற்காலி என்ற பாவம் நமது மனதில் தான் இருப்பது. நாமரூபாதிகள் மனதைவிட்டுப் பிரிந்திரா. நாற்காலி மனத்தின் பரிணாமமாயினும், அது தனித்திருப்பதான பேதபுத்தி உண்டாக அது நமது மனதைத் தாக்குகிறது. உடனே நாற்காலி நன்றாக இருக்கிறது, அதைப் பழுதுபார்க்கவேண்டும் என்ற இது போன்ற எண்ணங்களை அது நமது மனதில் உதிக்கும்படி செய்கின்றது. ஆகவே மனது தன் சலனத்தால் நாற்காலியை வேறாகப் பார்த்தமாத்திரத்தில் அது மனதில் மறுபடி தாக்கி அதன் சலனத்தை எவ்வாறு அதிகப்படுத்தியதோ, அதுபோல ஜீவனது சலனமாகிய கர்மப்பிரவிருத்தி உண்டானதும் ஜகத் உண்டாயிற்று. ஜகத்து ஜீவன்மேல் தாக்க அதன் கர்மப்பிரவிருத்தி ஆகிய சலனம் அதிகரித்தது.

இனி 4-ம் கேள்விக்கு விடை கொடுக்கப் புகின் இந்தப் பிரவிருத்தி குணம் தான் என்று சொல்லவேண்டும். இது ஓர் மனப்போக்கு ஆதலின் இவ்வாறு கூறும்படி நேர்ந்தது. (கீதை—14.)

ஏன் இந்தப் பிரவிருத்தியில் ஸ்வரூபம் அளவு முதலிய விஷயமான பேதம் காணப்படவேண்டும் என்ற கேள்வியை எடுத்துக்கொள்ளுவோம். ஜீவாத்மாக்களுக்கு ஸ்வரூபபேதம் இல்லாவிடினும் மனப்போக்காலும், அவைகள் வாழவேண்டிய விதங்களாலும், அவைகளுள் அனந்த பேதங்கள் காணப்படுகின்றன. இதனால் தான் முற்கூறிய பேதங்கள் காணப்படுகின்றன. இந்தக் கேள்வி ஸம்பந்தமாக அநேக கடின விஷயங்கள் உண்டு. இதை இங்கு எடுத்து விஸ்தரித்தால் மிக விரியும் ஆதலின் தயவு செய்து பிரம்மஸூத்ரம் II, (i) 32-36 களையும் அவைகளுக்குச் சங்கரபகவத்பாதாள் எழுதியுள்ள வியாக்யானத்தையும் பார்க்க.

இந்தக்கர்ம விஷயப்பிரவிருத்தியை எவ்வாறு அடக்குவது என்ற கேள்வி பிறந்தால் ஆத்மஸ்வரூப விசாரணையும், ஸத்குரு உபதேசப்படி அவர் ஸஹாயத்தால் செய்யப்படும் அப்யாஸமுமே இந்தப் பிரவிருத்தியை அடக்கும் வழிகள் என்று மறுமொழி கூறலாம்.

III. வேதாந்தத்தின் விரிவு

'ஸத்யதீபம்'(The Light of Truth) என்ற பத்திரிகையைப்பற்றிக் குறிப்பு எழுதுங்கால் பொதுவாக அதைச் சிறப்பாகக் கூறிவிட்டு, வேதாந்தத்தைவிட சைவஸித்தாந்தம் சிறந்தது என்று ஸ்தாபிக்க

முயலும் ஓர் வியாஸவிஷயமாக இராஜம் அய்யர் பின்வரும் அபிப்பிராயத்தை வெளியிடுகிறார்:—

"இம்மாதிரி முயற்சிகளைக் கண்ணுற்ற வேதாந்தி ஒருவன், 'விசாரணை விஷயமாத்திரமாக நிற்குங்கால் மூன்று பதார்த்தங்களோடு நிற்கவேண்டியதில்லை. முன்னூறு பதார்த்தங்கள் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். வீண்வாதம் குறைந்து, பரமபதம் அடைவது ஸ்வலபமாகிவிடுமாகில் அவ்வாறே செய்வதில் தடை ஒன்றும் இல்லை' என்று வியந்து கூறி மௌனமாவான்" என்றார்.

IV. ஞான வாஸிஷ்ட விஷயமான ஓர் எச்சரிக்கை

ஞான விஷயத்தில் எச்சரிக்கை செய்ய யோக்கியாளான மஹான்கள் ஞானவாஸிஷ்ட விஷயங்களில் பின்வருமாறு புத்திமதி கூறுவர்:—

"கதைகளின் ஸித்தாந்தத்தை நாம் கவனிக்க வேண்டுமே ஒழிய, அவைகள் சொல்லியிருக்குமாதிரியில் மனத்தைப் பறிகொடுத்துவிடலாகாது. இக்கதைகளை வாசிக்குங்கால் முமுக்ஷுவின் மனம் இருக்கவேண்டியமாதிரி விளங்க பின்வரும் திருஷ்டாந்தத்தைக் கவனிக்கவேண்டும்: ஒரு மனிதன் தன்னிடமிருந்த ஓர் ரத்னத்தை ஓர் குப்பைமேட்டில் நழுவ விட்டுவிட்டதாக வைத்துக்கொள்வோம். அவன் அதைக் கண்டெடுக்க அந்த மேட்டிலுள்ள குப்பைகளை வாரி குப்பைகளை எல்லாம் ஓர் பக்கம் ஒதுக்கிவிட்டு அதனுள்ளிருக்கும் ரத்னம் அகப்பட்டவுடன் மற்றை குப்பைகளைத் தூர எறிந்துவிடுவான் அல்லவா? அதுபோல ஆத்மாவை மறந்த நாம் ஞானவாஸிஷ்டத்தை வாசிக்குங்கால் ஆத்மவிஷயமாக ஒரு கதை என்ன சொல்லுகின்றது என்பதை அறிவதற்காகக் கதையிலிருக்கும் சாதுரியபாகங்களை முக்கிய பாகங்களிலிருந்து பகுத்தறிந்து, எப்பொழுதும் ஆத்ம விஷயத்தை மாத்திரம் கைக்கொள்ளவேண்டும், மற்றைய சாதுரியபாகங்களை அவ்வளவாகக் கவனிக்கவே கூடாது. இந்த எச்சரிக்கையை விளக்குவதற்காக வாஸிஷ்டத்திலிருக்கும் சிகித்வஜன் கதையைத் திருஷ்டாந்தமாக எடுத்துக்கொள்வோம்: இதில் சூடாலை (சிகித்வஜன் பெண்சாதி) தனது யோகமஹிமையால் தன் கணவன் மனத்துள் புகுவதாகவும், ஒரே காலத்தில் ஆணுரு பெண்ணுரு தரித்து நிற்பதாகவும், இது போன்ற அநேக சித்து வித்தைகளைச் செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது. இந்தச் சாதுரிய விஷயங்கள் எல்லாம் கதைக்காக ஏற்பட்டவைகள். இந்தக் கதையின் முக்கியபாகம் உண்மையான உள்ளத் துறவு இன்னது என்று விளக்கும் பாகமே. இது போல் மற்றையக் கதைகள் விஷயங்களிலும் எடுத்துக் காட்டலாம். ஆகையால் வஸிஷ்டம் வாசிக்கப்புகும் முமுக்ஷுக்கள் இதை அவசியம் கவனிக்கவேண்டும். இல்லாவிடில் இப்புத்தகம் அவர்களைக் கெடுத்துவிடும்,

இந்துலேகை

(65-ம் பக்கத் தொடர்ச்சி)

கோ.—"அவனை அதிகமாய்க் கண்டிக்க நான் உத்தேசித்திருக்கிறேன். அவன் சென்னையினின்று திரும்பிவரும்போது என்ன செய்கிறேன் பாரும்."

ப.—"ஆமாம். அவன் திரும்பிவரும்போது பலமாய்க் கண்டியுங்கள். நீரே அவனைத் தண்டிக்க வேண்டும், கோவிந்தபாணிகரே."

கோ.—"நானே அவனைத் திட்டுகிறேன். அதைப் பற்றிச் சந்தேகிக்கவேண்டாம்."

"நீரும் நானும் இருவரும் அவன்மேல் கோபங் கொண்டால் அவன் அடங்கிவிடுவான். இனியொரு முறையும் என்னை முன்போல் அவமதிக்கவிடாதேயுங்கள். நீர் அவனை ரக்ஷிப்பீரென்று அவன் எண்ணியிருக்கவேண்டும். ஆனால், தான் செய்த தப்பை நோக்கும்போது, அவன் அதிகமாய்த் தாழ்ந்துவிடுவான்."

கோ.—"அதற்குச் சந்தேகமா? அவன் அதிக தாழ்மையாயிருப்பான்."

ப.—"என் மனதில் வேறோர் எண்ணம் இருக்கிறது. அதை உம்மிடஞ் சொல்லவேண்டும். கோவிந்தபாணிகரே, உமது மதியூகத்தைப்பற்றியும் புத்திமதிகளைப் பற்றியும் நான் அவ்வளவு உயர்வாய் எண்ணியிருக்கிறேன். மாதவன் இந்துலேகையை விவாஹஞ்செய்துகொள்ள அபிப்பிராயப்படுகிறானென்பது உமக்குத் தெரிந்திருக்கும். இந்துலேகையும் அவனையே கூடுவாள்போலிருக்கிறது. முதன் முதலில் அவர்களுக்கு வயது பொருத்தமில்லை. இன்னொன்று அவனுடைய இப்போதைய நிலைமையில் அவன் மணம்புரிவது யுக்தமாயில்லை. செல்வமுஞ் சிறப்புமுள்ள வேறொருவனை மணம்புரிவது இந்துலேகைக்கு அதிக நலமாயிருக்கும். அவளை ஒரு பெரிய கனவானுக்குக் கொடுப்பதாக நான் நிச்சயம் பண்ணிவிட்டேன். அவர் வெகு சீக்கிரத்தில் இங்கு வருகிறார். அவர் பெண்ணின் ஸம்மதத்தைப் பெறுவது கஷ்டஸாத்யமாயிருக்கும் போலிருக்கிறது. அவள் அதிக பிடிவாதமாயிருக்கிறாள். எனதருமைப் பாணிகரே, நீர் இவ்விஷயத்தில் எனக்கு உதவிபுரியவேண்டும், என்ன சொல்லுகிறீர்?"

கோ.—"ஓ, அப்படியே ஆகட்டும். ஆனால் எதிர்பார்க்கப்படும் கனவானின் பெயர் எனக்குத் தெரியாதே."

. . .

ப.—“அவர் நாமதேயம் மூர்கிலத்து மணக்கால நம்பூதிரிபாத். அவர் பணத்திலுருளுகிறார். அவருடைய செல்வாக்கும் கம்பீரமும் வேறெவர்க்கு உண்டு?”

கோ—“அப்படியானால் அவர் தடையின்றி வரட்டும்.”

பஞ்சுமேனவன் திடீரென பேச்சுமாற்றி, “சீனனுடைய செலவுக்குச் சீனுபட்டர் பணந்தருவதாக ஜம்பஞ் சொன்னாரே. இவ்வுலகில் அவருக்கு எப்படியொரு காசு கிடைக்கும்? அவனுக்கு நான் அரைக்காசுகூடக் கொடேன். குஞ்ஞிக்கும் அவளது பிள்ளைகளுக்கும் இருக்கும்சொத்தையெல்லாம் பிடுங்கிவிடுகிறேன். அப்புறந்தானே பார்க்கவேண்டும் சீனனுடைய பட்டணப்படிப்பை!”

கோ.—“அதுதான் சரி. நாம் பின்னால் நடப்பதைப் பார்ப்போம்.”

ப.—“அப்போது நீர் ஒன்றுக்கும் உதவமாட்டீரல்லவா?”

கோ.—“நானா? சரிதான். குடி கடைத்தேறிற்று. நானேன் ஒரு சல்லி அவனுக்குக் கொடுக்கவேண்டும்?”

“நான் சொல்வதும் அதுதான்” என்று சொல்லிக்கொண்டே பஞ்சுமேனவன் ஸமாதானமாய் வீட்டுக்குத் திரும்பிவிட்டார். அவன் வந்து போனதின் இலாபமென்னவெனின், அவருடைய அந்தரங்க ஏற்பாடுகளெல்லாம் கோவிந்தபாணிகர் அறியலானார்.

இரண்டு மூன்று தினங்களாயின. கோபங்கொஞ்சம் மாறிற்று. ஆனால் எப்படியிருந்தபோதிலும் நம்பூதிரிபாத்துடன் ஸம்பந்தங் கூடியசீக்கிரம் நடக்கவேண்டுமென்னும் அவரெண்ணந்தான் சரியான ஏற்பாடென அவர் மனதில் நிச்சயமாய்ப் பட்டுவிட்டது.

6-ம் அத்யாயம்

பஞ்சுமேனவன் கடந்ததைக் குறித்து வ்யஸனமுறல்

மாதவன் சென்னைக்குச் சென்று ஐந்தாறு தினங்களாயின. வீட்டின் தென்னண்டை தாழ்வாரத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்தான் பஞ்சுமேனவன். போஜனம்முடித்துவிட்டு கேசவன் நம்பூதிரி வழக்கப்படி படுக்கைக்குப் போகுந்தருவாயில் பஞ்சுமேனவன் அவனை அழைத்து உட்காரச் சொன்னார். கேசவன் நம்பூதிரியும் அவன் பக்கத்திலிருக்கும் ஒரு விசுபலகையின்மீது உட்கார்ந்தான். அவனைப் பார்த்துப் பஞ்சுமேனவன், “இன்னும் ஆள் அனுப்பவில்லையா? ஏன் நமக்கொன்றும் பதில்லை?” எனக் கேட்டார்.

கே—“அன்றையதினந்தான் ஆள் அனுப்பினோமே. நம்பூதிரிபாத் ஊரிலில்லை இன்னும் நாலைந்து தினங்களில் வந்துவிடுவார். இன்றையதினம் ஸூர்யோதயம் இன்னொரு மனிதனை அனுப்பியிருக்கிறேன். நம்பூதிரிபாத் வீட்டிலிருந்தால் நாளையே இங்கு வந்து சேர்வாரென்றெண்ணுகிறேன்” என்றார்.

உடனே பஞ்சுமேனவன் லக்ஷ்மிகுட்டியம்மாளையழைத்து, “ஸமாசாரத்தை இந்துலேகைக்குத் தெரிவித்தனளா?” என்று கேட்டான்.

ல.—“என்ன ஸமாசாரம்?”

ப.—“இதோபார் இந்த ஸ்திரீயின் கொழுப்பை! ஆமாம், உனக்குத் தெரியுமோ இன்ன ஸமாசாரமென்பது? தெரியாதுதான். ஏண்டி, நாணங்கெட்டவளே. என்ன, உண்மையைப் பேசேன். உன் தலையைக் கிள்ளி யெறிந்துவிட்டிருக்கவேண்டும். இந்தத் தரித்திரங்களை யெல்லாம் வீட்டைவிட்டு விலக்குவது நலம்.”

ல.—“என்ன, அப்பா, நீ என்னென்னமோ சொல்லுகிறாய். ஒருவரும் என்னிடத்தில் ஒன்றுஞ் சொல்லவில்லையே. ஒரு காரணமுமின்றி நீர் ஏன் என்மீது சினங்கொள்ளவேண்டும்?”

கே—“அவள் சொல்வது வாஸ்தவந்தான். லக்ஷ்மிகுட்டிக்குத் தெரியாது. ஒரு விஷயமும் அவளிடத்தில் நானொன்றுஞ் சொல்லவில்லை. நீர் இரகஸ்யமாக இருக்கட்டுமென்றீர். ஆதலால் நான் ஒருவரிடமுஞ் சொல்லவில்லை.”

“அப்படியானால் சரிதான். நீ சொல்லியிருப்பாய் என்று எண்ணினேன்” என்று சொல்லிவிட்டுப் பஞ்சுமேனவன் லக்ஷ்மிகுட்டியைப் பார்த்துச் “என் அருமைப் பெண்ணே, அந்த எண்ணத்தின் மேல்தான், உன்மேல் எனக்குக் கோபமுண்டாயிற்று. அதைப்பற்றி மனதிலொன்றும்வைக்காதே. மூர்க்கிலத்து நம்பூதிரிபாத்துக்கும் இந்துலேகைக்கும் முடிபோட்டு வைக்கலாமென்று நான் உத்தேசித்திருக்கிறேன். இந்துலேகை ஸம்மதிப்பாளா?” எனக் கேட்டான்.

ல.—“நான் எப்படி நிச்சயமாய்ச் சொல்வது? இந்துலேகை ஸம்மதிப்பாளோ அல்லது சம்மதிக்கமாட்டாளோ?”

ப.—"அடீ, துஷ்டை, அதையன்று உன்னைக் கேட்பது. தேவரீர் சற்றுக் கவனியும் இவளது குறும்பை"

கே.—"நீர் என் இந்துலேகையையே நேரில் கேட்கலாகாது? அதுதான் யுக்தமாயிருக்கும்."

ப.—"தேவரீர் புத்தி தைல புத்தியாயிருக்கிறதே. சற்று சொல்லும், யார்கேட்பது இந்துலேகையை? ஒருவேளை லக்ஷ்மிகுட்டி கேட்டால், இரண்டிலொன்று வெளிப்பட்டுவிடும். லக்ஷ்மி குட்டீ! இந்த நம்பூதிரிபாத்தைப்பற்றி நீ எப்போதாயினுங் கேள்விப்பட்டதுண்டோ?"

ல.—"இல்லை."

ப.—"தாங்கள் கொஞ்சம் தயைசெய்து எல்லாவற்றையும் ஸாங்கோபாங்கமாய் எடுத்துரைக்க வேண்டும் லக்ஷ்மிகுட்டிக்கு."

"நல்லது" என்றான் கேசவன் நம்பூதிரி. பஞ்சு மேனவன் சாப்பிட்டெழுந்து கை கழுவிக்கொண்டான். அத்தருணத்தில் ஒரு வேலைக்காரன் ஓடி வந்து கேசவன் நம்பூதிரிக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறதென்று சொன்னான். நம்பூதிரி விரைவாய் எழுந்து கடிதத்தை வாங்கிக்கொண்டு விளக்கண்டை போனான். பஞ்சுமேனவன் ஆவலாய் "என்ன, உன் கடிதத்திற்குப் பதிலா?" என வினவினான்.

கே.—"ஆம், ஆம்."

ப.—"ஆனால் உரக்க வாசியும். அதிக உரக்க வேண்டாம்."

அதற்குமேல் கேசவன் நம்பூதிரி படிக்கத் தொடங்கினான் நம்பூதிரிப்பாத்தின் கடிதத்தை:—

"நிரம்ப ஸந்தோஷமாயிற்று உன் கடிதத்தைக் கண்டவுடன். நான் ஸ்நான வேளைக்குச் சரியாய் அவ்விடம் வந்து சேருகிறேன். செருசேரியும் என்னுடன் வருகிறார். நீ எழுதிய விவரத்தை விட அதிகமான விவரம் பொனயப்ராம் முதலியவர்களிடமிருந்து அறிந்துகொண்டேன். உன்னை நேரில் காண ஆவலாயிருக்கிறேன். மற்ற விசேஷங்களெல்லாம் நேரில்."

"பேஷ்! இந்துலேகை இன்னும் நித்திரைக்குச சென்றிராள். தேவரீர் எழுந்திரும் போவோம் அவளுடைய அறைக்கு. இந்த விஷயத்தைப் பற்றிக் கொஞ்சம் அவளிடம் பிரஸ்தாபிக்கவேண்டும். என்ன சொல்லுகிறாள் பார்ப்போம். அப்போது அறியலாம் அவளது அபிப்ராயத்தை" என்றான் பஞ்சுமேனவன்.

பஞ்சுமேனவனும் நம்பூதிரியும் இருவரும் இந்துலேகையின் அறைக்குச்சென்றனர். அவள் ஒரு சோபாவின்மீது சாய்ந்துகொண்டு சாகுந்தலநாடகத்தைப்படித்துக் கொண்டிருந்தாள். கேசவன் நம்பூதிரி தானே ஒரு நாற்காலியின் மீது உட்கார்ந்தனன். பஞ்சுமேனவன் சோபாவில் உட்கார்ந்துகொண்டு இந்துலேகையைத் தன்னருகே அழைத்து அவளுடைய புஜங்களைக் கையால் தட்டிக்கொடுத்தான்.

ப.—"குழந்தாய், என்ன படித்துக்கொண்டிருக்கிறாய்? அன்றைக்குச் சொன்னாயே அதேமாதிரிக் கதையா?"

இ.—"இல்லை, தாதா, இது சாகுந்தலம். இந்தப் பிரதி சரியாய் அச்சிடப்படவில்லை. படிப்பதற்குச் சிறிது வருத்தமாயிருக்கிறது."

ப.—"ஏன். சுத்தப்பிரதியொன்றை வாங்கேன். எங்கே அகப்படும் சொல்? நான் உடனே பணங் கொடுக்கிறேன்."

இ.—இதைவிட சுத்தப்பிரதிபிரசுரிக்கப்பட்டிருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் தெரிந்துகொண்டுஉனக்குச்சொல்லுகிறேன்."

ப.—உனக்காகப் பிரத்யேகமாக ஒருநல்ல பிரதி தயார்பண்ணிக் கொடுக்கிறேன்."

இந்துலேகை சிரித்துக்கொண்டு, "எனதருமைப் பாட்டனாரே, அது நச்சுவேலை. செலவு அதிகம். தவிரவும் இதைவிடப் பெரியதான அச்சு இருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது."

ப.—"என்ன அது, உனக்குத் தெரியாதது?"

இ.—"இதைவிடப் பெரியதான அச்சு இருக்கிறதோ இல்லையோ என்பது—அதாவது அவர்கள் அச்சடிக்கும் கருவிகள்."

ப.—"என் குழந்தாய், அதைப்பற்றி எனக்கொன்றுந்தெரியாது. இல்லாவிட்டால் அதையும் வாங்கலாமே."

இந்துலேகைக்கு உண்டான ஆச்சரியத்திற்கோர் அளவில்லை.

பஞ்சுமேனவன் அப்புறம் வந்த் காரியத்தைப் பற்றி உபந்யஸிக்கத் தொடங்கிவிட்டான்: "புத்ரியே, ஏதோ ஒரு விசேஷத்தைப்பற்றி உன்னிடம் ஆலோசிக்க வந்திருக்கிறோம். பிராசீன ஆசாரத்தின்படி, இப்போது இந்த விஷயத்தைப்பற்றி நீ அறியவேண்டிய அவசியமில்லை. நடக்கும்போது உனக்குத்தெரிவித்தால் போதும், ஆனால் நாமிருப்

பது கலியுகமாதலால் கொஞ்சம் பயமாயிருக்கிறது. ஆகையால் உன்னிடம் யோசிக்க வந்தோம்.

நே.—''ஆகட்டும். சொல்லுங்கள்.''

ஆனால் இந்துலேகை கேசவன் நம்பூதிரி பேசுவதை அடக்கி, "என் தகப்பனார் பிராசீன விதிகளின்படி நடந்தாற் போதுமானது. நான் கலிகாலத்தின் கோலங்களுக்கெல்லாம் இசைபவளல்லள். ஸமயம் நெருங்கியபோது சொன்னாற் போதும் எனக்கு ஸமாசாரத்தை'' என்று பணிவாய்க் கூறினாள்.

கேசவன் நம்பூதிரி பஞ்சுமேனவனைப்பார்த்து ''பேஷ், பேஷ், அதுதான் நல்ல பெண்ணின் அடையாளம். அதுவேபோதும். நாம் படுக்கப்போகலாம்'' என்றான்.

ப.—"ஆனால் முகூர்த்தம் நெருங்கிய தருணத்தில் ஏதாவது தடங்கல் நேரிட்டால் அப்போது என் கையைப் பிசையவேண்டும். எல்லாவற்றையும் இப்போதே நிச்சயம் பண்ணிக்கொள்ளவேண்டும்.''

இ.—"காரியம் நடக்கும்போது உண்டாகக்கூடிய தடங்கல்களை இப்போதே எவ்வாறு யூகித்தறியக்கூடும்? தெரிந்தாலும் இப்போது எப்படி நிவர்த்தி செய்ய முடியும்?''

ப.—"அதோ பார்த்தாயே, இங்கிலீஷ் தலை காட்டுகிறது.''

இ.—"எங்கே? தாதா. நான் மலையாள பாஷையில் தானே பேசினேன்.''

ப.—"ஆமாம், என் செல்வக் குழந்தாய், ஆமாம். உன் ஸாமர்த்யம் எனக்குத் தெரியாதா? நான் அறியேனா?''

இ.—"உண்மையில் அதில் என்ன ஸாமர்த்யமிருக்கிறது? எனக்குத் தெரியவில்லையே. உமது கருத்து ஒன்றும் எனக்குப் புலப்படவில்லையே.''

பஞ்சுமேனவன் கேசவன் நம்பூதிரியைப் பார்த்து, "இவளோடு வாய்கொடுத்து விட்டால் பொழுது விடியும். இராத்திரி தூக்கமெல்லாம் கட்டிவைக்க வேண்டியதுதான். நாம் வந்தகாரியத்தை அவளிடஞ்சொல். ஒன்றையும் மறைக்காமல் எல்லாவற்றையும் வெளிப்படையாய்ச்சொல்லிவிடு'' என்று சொன்னான்.

கே.—"அவளுக்கெல்லாந் தெரியும்.''

ப.—"இருக்கலாம். அதைப்பற்றி யவளுடைய அபிப்ராயத்தை நாம் உணரவேண்டும்.

கே.—"காரியங்கள் நடக்குந் தருவாயில் சொன்னாற்போதும் என்று அவள் சொல்லவில்லையா?''

ப.—"தேவரீர் ஏன் இவ்வளவு மூடத்தனமாய்ப் பேசுகின்றீர்? கேளும் அவளை. கேளும்.''

(தொடரும்.)

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

அடும் ஓநாயும்

நாடொளிர் விளங்கு மோடையின் மேற்பால்
வாடியோ ரோநாய் வயிற்றப் பசியான்
தேடுமிரை யெங்குங் காணாது தியங்கி
ஒடுங்கிய கண்ணொடும் உடைந்த மனத்தொடும்
கிடைத்திடு மருவிநீர் குடித்து பசியாற்ற

அடித்தலம் பேர்த்த தடைந்த தவ்விடமே—அடைந்
கருவிநீர்ப் பருகு மமையத் தொருசிறு [தாங்
உருவிள மாடு விரைவொடு துள்ளி
நீர்க்கால் கீழ்ப்பால் புனலைப் பருகுறீஇ
யமையத் தோநா யெண்ணிய "தந்தோ!

யமையுமவ் வாடென் னார்பசிப் பிணிக்கே—ஆயி
காரண முடனதை கவர்ந்தெனக் கவருறீஇ [னும்
பாரிய வகட்டிற் படுத்துவ'' னெனத்தேர்ந்து
"ஆரடா அவன்என தருவிர் கலக்குவ
தாரவன் அழுக்கொ டருவிநீர் கெடுத்து

குடித்திடா வண்ணம் குத்திரஞ் செய்வது?
அன்றெனை எதிர்த்து கன்றிய வாடன்றே!
நன்றுனைக் கொன்றிடல் நலமிது வன்றே''
எனக்கடுத் துரைக்க வவ்வா "டிறைவ!
நானுனை யறியேன்; ஊனமுனக் கென்று

எண்ணிய தின்'' றென இயம்பிட "இழியாய்!
எண்ணு மோராண்டின் முன் இழைத்தது முண்'';
"கண்டிலேன் பிறந்தினம் கடுந்திங்களாஅ'' [டென
றெனவக் கொடிய துந்தை "யன் றிழிவொடு
தவறி யற்றியவுண் டவற்றினிற் குன்னை,

தந்தைசெய் பிழைக்கு மைந்தனு முரிமையே—அத
உன்றனைக் கொன்றின் றானுண் டிடுவே'' [னல்
னென்றதைக் கொன்றுத் தின்று தேக்கியதே—அது
[போல்

கொடியோர் தாஞ்செய் கொடுமைக் கெல்லாம்
பொருந்தங் கூறலு மிருமல கியல்பே.

ஜகந்மித்யா : ஓர் ஊரில் ஓர் ஸ்வாமிகள் இருந்தார். அவருக்குப் பாலே ஆஹாரமாகவிருந்தபடியால் அவருக்குப் பால்ஸ்வாமிகள் என்றுபெயர்வந்திருந்தது. அவர் அரையில் காஷாயம் உடுத்தி உலகத்தையே லக்ஷ்யம் செய்யாது தம்மைச்சுற்றிக் கூடிய ஜனங்களுக்கு ஜகந்மித்யை, பிரபஞ்சமே பொய் என்று அடிக்கடி உபர்யாஸம் செய்து வந்தார். இவ்வாறு உபங்யாஸம் செய்துகொண்டிருந்த ஒருநாள் அந்தஊர்க்கோயில் யானைக்கு மதம்பிடிக்கக் கட்டை அறுத்துக்கொண்டு இவர் இருக்கும் இடம் நோக்கி அது ஓடிவந்தது. இதைக்கண்டதும் தம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள சிஷ்யர்கள் எல்லோரும் நான்கு புறமும் ஓடத் தலைப்பட்டனர். அவர்களோடு ஜகத்மித்யா பிரஸங்கம் செய்துவந்த ஸ்வாமிகளும் தலை தப்பினால் போதும் என்று மிகுந்தபயத்துடன் ஓடத் தலைப்பட்டார். யானையோ ஒருவரையும் கவனிக்காது இந்தஸ்வாமிகளையே துரத்திச்செல்ல, பார்ப்பவர்களுக்கு ஸ்வாமிகள் செய்த ஜகத்மித்யாப்பிரஸங்கத்தால் கோபங்கொண்டு வந்ததோ என்று தோற்றியது. ஸ்வாமிகளோ தமக்கு என்று, காஷாய வஸ்திரம்தவிர உலகில் வேறொன்றும் இல்லாதிருந்தும் உயிரை வெல்லமாகக்கருதி வெருண்டு ஓடி ஓர் சாக்கடைக்குழியில் விழுந்து விட்டார். யானையும் விடாது குழிவரை சென்று தன் தும்பிக்கையை உள்ளே விட்டுப் பார்த்து ஸ்வாமிகள் அகப்படாததுகண்டு வேறோர் வழியாக ஓடத் தொடங்கிற்று.

யானை பிடிபட்டு மதம் அடங்கிய பின்னர் ஸ்வாமிகளது பரமானந்த சிஷ்யர்கள் சாக்கடையண்டை வந்து ‘எல்லாம் பொய் என்றீரே! யானையும் பொய் தானே! இப்படி இருந்தும் நீர் அதற்கு ஏன் பயந்து ஓடி சாக்கடையுள்விழுந்து கிடக்கிறீர்?” என்று பரிஹாஸம் செய்தனர். அதற்கு ஸ்வாமிகள், ‘முதலில் என்னைக் கரை ஏற்றுங்கள், பின்னர் உங்கள் வினாவுக்குத் தகுந்தவிடை அளிக்கிறேன்’ என்றார். ஸ்வாமிகளை வெளியே கொண்டுவந்ததும் ‘இனிமேல் உங்களுக்குப் பால் முதலியவைகள் ஸமர்ப்பிக்கமாட்டோம். உமது பிரஸங்கத்திற்கு விரோதமாகப் பொய்யான யானைக்குப் பயந்து உயிர்பிழைக்கச் சாக்கடையுள் விழுந்ததால் உம்மைச் சாக்கடை ஸ்வாமிகள் என்போம்’ என்று எல்லோரும் கூக்குரலிட்டனர். ஸ்வாமிகள் தமக்கு இனிமேல் யாதொரு பயம் இல்லை என்று அறிந்தவராய், ஜகத்மித்யா என்ற வாக்யத்தின் ரஹஸ்யத்தை உணராதவராய், தமது சிஷ்யர்களை நோக்கி, “அடே மூடப்பயல்களா! யானையும் பொய், அது வெறிகொண்டது என்பதும் பொய், அது என்னைத் துரத்தியதும் பொய்; நான் குழியில் விழுந்ததும் பொய், இப்பொழுது கரை ஏறியதும் பொய், எல்லாம் பொய் பொய் பொய்யே’ என்று மிகுந்த சாந்தமாக மறுமொழி கூறினார். சிஷ்யர்கள் கேட்டதும் ஆனந்த பரவசரானார்கள், ‘வெகு ரஸமாக இருக்கிறது பலே’ என்று தாண்டவமாடி முன்னைவிடப் பதின்மடங்கு பால்பழம் முதலியவைகளை ஸ்வாமிக்கு ஸமர்ப்பிக்க ஏற்பாடுசெய்தனர். ஆயினும் அவர்களுள் ஒருவனுக்கு மாத்திரம் இந்த மறுமொழி தகுந்ததாகத் தோற்றவில்லை. அவன் மஹாபுத்திமான் விகடகவி. ‘அடே கெடுத்தாரே ஸ்வாமிகள்! இதைக் குழியுள்ளிருக்குங்கால் சொல்லியிருந்தால், அவரை கரை ஏற்ற இவ்வளவு கஷ்டப்பட்டிருக்கமாட்டோமே.’ என்று சொல்லிக்கொண்டே திடீரென்று ஸ்வாமிகளை மறுபடியும் சாக்கடையில் தள்ளிவிட்டான். உள்ளே கிடந்து தத்தளிக்கும் ஸ்வாமிகளை நோக்கி ‘மறுபடியும் தாங்கள் சாக்கடையில் விழுந்ததும் பொய்யோ!’ என்று வினவினான். பார்த்தார் ஸ்வாமிகள்! ‘இனி இவர்களை ஜகத்மித்யாவாதத்தில் வெல்லமுடியாது’ என்று கண்டார். ‘சாக்கடைமாத்திரம் ஸத்யம்’ என்று ஒப்புக்கொள்ளும்படி வந்துவிட்டது. எல்லாம் பொய் என்று கொண்டவருக்கு இதை மாத்திரம் மெய் என்று எவ்வாறு கூறமுடியும். மேல் வழியும் ஒன்றும் இல்லாததுகண்டு ‘யானையும் ஸத்யம், அது வெறிகொண்டதும் ஸத்யம், சாக்கடையும் ஸத்யம், இரண்டாம்தரம் சாக்கடையில் என்னைத் தள்ளியதும் ஸத்யம் எல்லாம் ஸத்யம் ஸத்யமே!’ என்று ஓலமிட்டார்.

சிறுவர்களே! அரை குறையாக வேதாந்தம்கற்று உண்மைப்பொருள் விளங்காது ஜகத்மித்யா என்று பிதற்றுபவர்கள் கதி இதுவே. பிரஹ்மஸத்யம் என்ற உண்மையை உணர்ந்து உள்ளபடி அனுபவிப்பவர்களுக்கு அன்றோ ஜகத்மித்யை என்று வேதாந்தம் கூறும். அவ்வாறு அனுபவிக்காத நாம் ஞானம்பிதற்றுவதாற் என்ன பயன். வீண் குதர்க்கங்களுக்கு இடமாகுமே ஒழிய அதனால் நம்மனம் சாந்தம் அடையாது. நம்போன்றவர்களை நோக்கி வேதாந்தம் இவ்விஷயமாகக் கூறுவது என்னவெனில்

'ஜகத்ஸத்யம் நித்யம். இதற்கு யாதொரு ஸந்தேகமு மில்லை. ஆனால் பரம் பொருளாகிய பிரஹ்மத்தை விட்டு வேறாக ஜகத்திற்கு ஓர் இருப்பும், பொருப்பும் இல்லை' என்பதே. எவ்வாறு தூங்கி விழித்த பின்புதான் ஸ்வப்னத்தைப் பொய் என்று கூற முடியுமோ, ஸ்வப்னங் கண்டுகொண்டிருக்கும் பொழுதே அதைப் பொய்என்று கூறமுடியாதோ அதுபோல பிரஹ்மஸத்யம் என்பதை உணர்ந்தாலன்றி ஜகத்மித்யா என்பது நிலைக்காது.

***

மனோராஜ்யத்தால் வரும் கேடுகள்.—பதினேழாம் நாள் பாரதயுத்தத்தில் தர்மபுத்திரர் கர்ணனால் அடிபட்டு யுத்தகளத்தில் நிற்கமுடியாது ஸாயுங்காலம் படைவீடு வந்து மிகுந்ததுக்கத்துடன் படுத்துக் கொண்டார். அப்பொழுது அவர் மனம் யுத்தகளத்தில்நடப்பவைகளின் மேல் பாய்ந்தோடியது. 'இன்று கர்ணனைக் கொன்று விடுவதாக அர்ச்சுனன் வாக்களித்திருக்கிறான். ஒருவேளை இதற்குள் கொன்றிருப்பான். நமது கஷ்டம் தொலைந்தது இன்றோடு. ஒருவேளை தான் வெற்றிபெற்ற ஸங்கதியை அர்ச்சுனன் சொல்லவந்துகொண்டிருந்தாலும்இருப்பான்' என்று இவ்வாறு மனக்கோட்டை கட்டிக்கொண்டும், அடிபட்டதால் வருந்திக்கொண்டும் தர்மபுத்திரர் இருந்தார்.

இங்கு இவ்வாறிருக்க யுத்தகளத்தில் தர்மபுத்திரரைக்காணாது அர்ச்சுனனும் பகவானும் வருந்தி பீமனிடமிருந்து தர்மபுத்திரர் சீக்கிரமாகவே படைவீட்டிற்கு போன செய்தியை அறிந்து அவர் தேஹ நிலை எப்படி இருக்கிறது என்பதை அறிய அவர்கள் தர்மபுத்திரர் இருந்த விடம் வந்தார்கள்.

அர்ச்சுனனையும் பகவானையும் கண்டதும் தம்ம னோராஜ்யத்திற்கு ஏற்ப அவன் கர்ணனைக்கொன்று விட்டுத்தான் தன் வெற்றியைக் கூறவந்திருக்கிறான் என்று எண்ணிக்கொண்டு அவனை வாயாரத் துதிக்கத் தொடங்கிவிட்டார். அப்பொழுது அர்ச்சுனன் தான்வந்த காரணத்தை எடுத்துரைக்க மனோராஜ்யம் வீணானதால் தர்மபுத்திரருக்கு அடங்காக் கோபம் மூண்டெழுந்தது. தேஹத்திலிருந்த வலியும் அப்பொழுது அதிகமாகத்தோன்ற அவருக்குக் கோபம் அதிகரித்தது. உடனே அவர் அர்ச்சுனனை வாயில் வாராதபடி எல்லாம் திட்டி இகழ்ந்துபேசி அவன் காண்டீவத்தையும் பழித்து 'இக்காண்டீவம் வேறு எவன் கையிலிருந்தாலும் இதுவரையில் கர்ணன் உயிரோடிருப்பானா! நீ என்னவானாலும் பேடிதானே!' என்று கடிந்துபேசினார்.

அர்ச்சுனன் முன்னமேயே 'என் காண்டீவத்தைப் பழிப்பவர்கள் யாராயினும் ஸரி அவர்களைக் கொன்றுவிடுவேன்' என்று ஓர் சபதம்கொண்டிருந்தான். அதன்படி அப்பொழுது தர்மபுத்திரரைக்கொல்ல உடைவாளை உருவத்தொடங்கினான். இந்த ரஹஸ்யம் உணர்ந்த பகவான் 'சபதம் பொய்யானாலும் பெரியோரைக் கொல்லலாகாது என்ற தர்மத்தைவிடக்கூடாது' என்று கூறி இதைப் பலவாறாக அர்ச்சுனன் மனதில் பதியும்படி எடுத்துக்கூட்டி அவனை அதர்மம் செய்யாமல் நிற்கும்படி செய்யமுயன்றார். என்ன சொல்லியும் அர்ச்சுனன் மனம் படியாதது கண்டு, 'பெரியோர்களை ஏகவசனத்தில் கோபத்துடன் அழைத்து வார்த்தையாடுவதே அவர்களைக் கொல்வதற்கு ஸமம். அவ்வாறு செய்து உன் சபதத்தைப் பூர்த்தி செய்துகொள்' என்று கூறி தர்மபுத்திரரைக் கொல்லாமலே அர்ச்சுனன் சபதம் நிறைவேறும்படி வழி காட்டினார். அர்ச்சுனன் வாயில் வந்தபடி எல்லாம் தர்மபுத்திரரை ஏகவசனத்தில் அழைத்து இகழ்ந்துபேசி ஓய்ந்தான். கோபம் தணிந்ததும் இவ்வாறு செய்ததற்குத் தன்னையே மிகக் கடிந்துகொண்டு அர்ச்சுனன் தற்கொலை செய்ய யத்தனிக்க பகவான்தடுத்துத் தர்மபுத்திரரைக்கொன்றே இருந்தால் அவன் மனம் எவ்வாறு வருந்தியிருக்கும் என்று கூறி ஸமாதானப் படுத்தினார்.

இதற்குள் மனோராஜ்யத்தால் உண்டாகிய கோபம் அடங்க தருமபுத்திரரும் அர்ச்சுனன் கடத்தையை மன்னித்து எல்லாம் தன் மனோராஜ்யத்தால் வந்த கேடே என்று தன்னையே கடிந்துகொண்டு ஸமாதானம் அடைந்தார்.

மனோராஜ்யம் அதாவது மிகுந்த ஆவலுடன் ஒன்றை எதிர்பார்த்தல் என்பது மனதை மிகச்சஞ்சலப்படுத்தும். அதன்படி விஷயங்கள் நேராவிடில் மனதில் கோபத்தை மூட்டிவிடும். மஹாபுத்திமானும், சாந்தநிதியாயும், தர்மாத்மாவாயும் உள்ள தர்மபுத்திரரே மனோராஜ்யத்தின் வாய்ப்பட்டு இப்பாடு பட்டார் என்றால் பாமரர்களாகியநமது கதி என்ன! ஆதலால் இவ்வாறு மனோராஜ்யங்களுக்கு ஆளாகாது எந்த ஸமயத்திலும் நம்மனம் சஞ்சலப்படாமல் காக்கவேண்டியது நமது கடமையல்லவா! இக்கருத்தைத்தான் ஓர் மஹான் தாம் பரமபதம் எய்துங்கால் 'எதிர்பார்க்காதே' என்ற உபதேச மொழியாகக் கூறிப்போனார்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

த்ரௌபதி அல்லது மனத்திண்மை

3. ஐவரையடைந்தகாதை

எவனோ வோர் பிராஹ்மணச் சிறுவன் வில்லில் நாணை ஏற்றி த்வநித்து அம்பைப்பூட்டிக் குறியைத் தாக்கிவிட்டான்—அவனையா த்ரௌபதி மணப்பது என்னும் கவலை துருபதனுக்கு உண்டாகியது. அர்ஜுனனுக்கென்று தவஞ்செய்து பெற்றபெண்ணை எவனோ ஒரு பிராஹ்மணச் சிறுவன் கொள்ளை அடித்தான் என்னும் எண்ணமும் அவன் மனதைக் குடைந்தது. அன்றியும் இக்குழப்பத்தோடு மனம் அலைய தன் க்ஷத்ரியச் செருக்குக்காக ஓர்வேளை என் வீணே யோர் பிரர்ஹ்மணச் சிறுவனுக்குக் கொடுக்க உடன்பட்டோமென்று கவலைகொண்டு இருப்பினு மிருக்கலாம். இது நிற்க.

வந்த அரசர்கள் எல்லோரும் துருபதன் எவனோ ஓர் பார்ப்பனச் சிறுவனுக்கு மகளைக் கொடுக்கத் தலைப்பட்டான் என்று கோபங்கொண்டு, "கிளியை வளர்த்து பூனைக்களிப்பது முண்டோ? அல்லது பழம் நழுவிப்பாலில் விழும்படிச்செய்தல் அழகோ? உன் நடத்தை நன்று! நன்று! எல்லோரையும் வரவழைத்து யாமெல்லோரும் த்ரௌபதி மாலையிடற்காக வந்திருக்க அவளை ஓர் பிராஹ்மணனிற்களித்து எம்மை அலட்சியம் செய்வது அழகாமோ? எம்முள் த்ரௌபதிக்குத் தக்க வரனில்லையா? எங்களை அவமதிக்க எண்ணியல்லவா இவ்வாறு நீ செய்தாய்? உன்னைச் சும்மாவிட்டுவிட்டோம். சீச்சீ! பச்சைபசும் பொய்பேசி எல்லோரையும்அழைத்து எம்மை அவமதித்தால் உன்னைப்போன்ற அர்சர்களுக் காகுமோ? ஆகையால் எம்மை யவமதித்த உன்னை எதிர்த்து வெற்றிகொண்டு அத் த்ரௌபதியை யாம் கவராவிடில் நாங்கள் அரசருமல்ல. எங்கள் கையிலுள்ளவில்லும் வில்லல்ல: வெறும்புல்லே ஆகும் இச்சகமாய மொழி பேசுதல் இனிமுடியாது. உன்பேச்சுக் கடையை விட்டுவிட்டு வில்லெடுத்து எம்மை எதிர்த்து போரிடவருவாய்" என்றுசொல்லி கோபாவேசமும், தமக்குத்த்ரௌபதி கிடைக்கவில்லை என்ற ஆக்ரோஷமும், ஓர் பார்ப்பனச் சிறியனுக்குக் கொடுத்ததால் தமக்குஉண்டானஇழிவும்அவரைத் தூண்ட, ஒன்றும் தெரியாது துருபதன் தியங்க, த்ருஷ்டத்யும்நன் முதலியோரை எதிர்க்க ஆரம்பித்தனர்.

ஆயினும் எதிர்த்தவர்களைப் பிராஹ்மண வேடங்கொண்டு விளங்கிய பீமன் அர்ஜுனன் ஆகிய இவர்கள் எதிர்த்துத் தோற்கடித்ததால், அதனிடையே இருந்த கிருஷ்ண பலராமர்கள் பாண்டவர்கள்தான் அவர்கள் என்பதைக் கண்டு அவர்களுக்கு நன்மையுண்டாகக் கடவது என்று ஆசீர்வதித்துப் போனார்கள். பின் பிராஹ்மணக் கோலங்கொண்ட பாண்டவரும் நெடுநேரமாகத் தமது வரவை எதிர்ப்பார்த்து நின்ற அன்பு மிக்கத் தாயின்பால் அடையலானார். காலை பிக்ஷை எடுத்து வர சென்ற புதல்வர்கள் வரவில்லையே என்று கவலையோடிருந்ததாயும் தன் பிள்ளைகள் வந்தார் என்று அறிந்து மிக்க ஆவலொடு கதவின் தாழைத் திறப்பதின்முன், தாயின் அன்பென்னும் ஆர்வம் மூண்டு "குழந்தைகாள்! நீங்களென்ன இன்று கொண்டுவந்தீர்கள்" என்று கேட்க, "பிக்ஷை" என்று சொல்ல "அப்படியாயின் நீங்களெல்லாரு மெடுத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிக்கொண்டே கதவைத் திறந்து த்ரௌபதி அவர்களோடு வந்திருப்பதைக் கண்டு "என்ன நினைத்து என்ன செய்தேன்" என்று ஏங்கலுற்றாள். த்ரௌபதியும் கவலையின்றி அக்குயவன் குடிசையையும் கொற்றவன் வீடென எண்ணி ஸுகமே இருந்தாள்.

இதற்குள் த்ருபதன் எண்ணாததெல்லாம் எண்ணி ஏங்கலானான். தான் பலநாளாய்த் தவஞ் செய்து கிடைத்த பெண்மணியை அர்ஜுனனுக்கென்றே வைத்திருக்க, ப்ராஹ்மணச் சிறுவன், 'யாமும் யந்திரத்தில்நாண் ஏற்றலாமோ' என்ன 'ஏற்றலாம்' என்று ஏன் சொன்னோம் என்பது அவன் மனத்தைக் குடைந்தது. அன்றியும் அரசரெல்லாம் அவமதிக்கக் காரணமும் உண்டாகிவிட்டதென்று மாத்திரமன்றி அவர் தன்னிடத்துப் பகைவருமாமென்று அவன் மனம் அலைந்தது. நாம் செய்தது நமது மகளுக்கு ஒத்த நடத்தையுடையதோ இல்லையோ என்றும் ஏக்கங்கொண்டான். இச்சிந்தனைகளெல்லாம் மனதை ஒடுக்கத் தன்மகளோர் குயவன் குடிசையின் வெளிப்புறமுள்ளத் திண்ணையின் மூலையிலுள்ள அறையுள் உள்ளாள் என்பதைக் கேட்டதும் அவன்மனம் அலைபாய வாரம்பித்தது. அது பொறுமை எல்லையைக்கடந்து அவனைத் துன்பஸாகரத்தில் அமிழ்த்தி விட்டது.

இவற்றையெல்லாம் அறிந்தமகன் த்ருஷ்டத்யும்நன் அக்குயவனது குடிசைக்கு ப்ராஹ்மண வடிவங்கொண்டு விளங்கிய பாண்டவர் செல்லும்பொழுது

அவரை இன்னார் என்று அறியும்பொருட்டு ஒற்றரை ஏவினான். அவர் பாண்டவரங்கு செல்லவாரம்பித்ததும் பின் தொடர்ந்தனர். ஆயினும் தானே அறிய வேண்டும் என்ற அவாவினால் தானும் பின் தொடர்ந்தனன்*. அங்கு அன்றிரவு நெடுநேரம்வரை பாண்டவர் கூறிய மொழிகளைக் கேட்டதன்றி, ப்ராஹ்மணர்களாக விளங்கிய அப்பாண்டவர் ஓர் தாயினிடம் சென்றதன்றி, பிக்ஷைகொண்டு வந்தேனென்று அர்ச்சுனன் சொல்ல, ஐவருங்கலந்து பலனையடையும் என்று ஓர் வயது முதிர்ந்தவள் கூறுவதையும், அன்றிரவு அவ்வவர் கொண்டு வந்தபிக்ஷை எல்லாம் சேர்த்து அதிற்பாதி யொருவனுக்கும் மற்றையபாதியை ஆறு கூறாக்கி மற்றவர் உண்ணுதையும் த்யுஷ்டத்யும்நன் கண்ணாரக்கண்டான். அன்றியும் அவன் அவர் அன்று நடந்த சண்டையைப் பற்றிப் பேசுவதும் வீரச்சுவையும் க்ஷத்திரியாது மனோதைரியமும் உத்ஸாகமு முடையவராக இருந்ததால் இவர்கள் ஐவரும் அரசர்களாகிய பாண்டவர்களாயிருக்கலாம் என்று எண்ணி தந்தைபால் சென்றான்.

த்ரௌபதி மாத்திரம் கொஞ்சமேனும் வெறுப்பின்றி மிக்க ஆனந்தத்தோடே இருந்தாள். அது அவளுக்கெவ்வாறு உண்டாகிய தென்றும் தெரியவில்லை. அது அவளையுமறியாது மேற்கிளம்பி அவளைத் தன்வசம் செய்துகொண்டு விட்டது. தன் வீட்டை அடைந்தாற்போலவே அவளுக்குப் பட்டது. தானிருந்த அரண்மனை இப்பொழுதிருக்கும் குயவன் குடிசைக்கும் உயர்வாக இருக்குமென்று அவளுக்குப் படவில்லை. கவலையின்றி மிக ஸுகமாகப் பாங்கிமார் படைக்க உண்ட உணவு இப்பொழுது தன் புக்கவீட்டில் உண்ட பிக்ஷையுண்டிக்கு நிகராகாதென்று அவளறிந்தாள். அது பாதி வயிற்றுக்கும் போதாதா யிருப்பினும் அவள் மனத்துத் தன் கணவர் என்று எண்ணியதும் தனக்கும் தெரியாது உள்ளூறி அவர் பால் ஒழுகிய அன்பும், தான் புக்கவீடென்னு மறிவும், தான் அவருடைய கஷ்ட நஷ்டங்களுக்கும் ஸுகதுக்கங்களுக்கும் பாத்தியப்பட்டவள் என்னும் உணர்ச்சியும் தூண்ட, வயிறு நிரம்பிப் பூரிக்கும்படிச் செய்தன. இந்நிலைமையையுடைய மனோவலிமையோடுதான் முதலில் த்ரௌபதி பாண்டவரின் சிறு குடிசையுள் புகுந்தது.

இரவில் த்யுஷ்டத்யும்னனால் தேற்றப்பட்ட துருபதன் காலை புரோஹிதர்களின் மூலமாகவும் அவர் பாண்டவர்தான் என்று உணர்ந்தான். உணர்ந்ததும் அவரைத் தக்கமரியாதையோடு தன் வீட்டிற்கழைத்து வந்தான். இதற்குள் மூத்தோனாகிய தருமபுத்திரர் குசலப்ரச்நம் செய்தனர். துருபதனும் த்ரௌபதிக்கும் அர்ஜுனனுக்கும் மணஞ்செய்ய முஹூர்த்தம் நியமித்தான். ஆனால் அதில் தடை ஒன்று உண்டாயிற்று. தரும நெறியிற் சிறந்த தருமபுத்ரர் துருபதனைப் பார்த்து "பாஞ்சாலியை நாங்கள் ஐவருமணக்க வேண்டியது. தாய் மொழி அது. அதை நாங்கள் தவர முடியாது, என்று சொல்லக், குந்தியும் "ஆம் நான் அவர் பிக்ஷைக் கொண்டுவந்ததாகச் சொல்ல நீங்கள் ஐவரும் கலந்து புஜியும் என்று சொன்னேன். அது அவரால் முடியாதாகிவிட்டது. என் வாக்கு தவர முடியாது; ஆகையால் இவர் ஐவரும் பாஞ்சாலியை மணக்கவேண்டும்" என்றாள். இவையெல்லாம் துருபதனுக்குக் கிணறுவெட்ட பூதம் புறப்பட்டாற்போலப் பட்டது. மிகச்சிந்தாக்ராந்தனாய் ஒன்றுந் தோன்றாது சற்றுத்திகைத்து,

"இது எங்கேனும் உலகிற்கு ஒக்குமா? ஓர் பெண்ணை ஐவர் மணப்பது தருமமாகுமா? அது அவள் பாதிவ்ரத்யத்திற்கு அழகாகுமா?" என்று பலவாறு சிந்தாக்ராந்தனாக முகஞ்சிவந்து கூறியதன்றி மனம் மிகக் குழம்பி திக்ப்ரமையாக நின்றான். இந்நிலைமையில் துருபதனைத் தேற்றும் பொருட்டு வந்தாற்போல வ்யாஸர் அங்கு இருந்தாற்போலிருந்து தோன்றினார். தோன்றி, துருபதனைத் தன்னோடழைத்து மறைவில் சென்று "ஹே துருபத! உன் மகள் ஓர் தெய்வப்பெண். அவள் முன்பிறப்பில் பரமசிவனைக் குறித்துத் தவஞ்செய்து நல்ல கணவன் வேண்டுமென்று ஐந்துமுறை கேட்டு ஆறாவதுமுறைக் கேட்க புகுந்தாள். அப்பொழுதவர் தடுத்து 'ஐவர் கணவரைத் தந்தேன். உன் கவலையை ஒழி' என்று கூறி அவளைத் தேற்றினார். இதற்குள் அவள் கண்ணிலிருந்து வருத்தத்தால் கங்கையாற்றில் வீழ்ந்த நீர், தாமரை இலை உருவம்கொண்டு விளங்குவதைக்கண்ட இந்திரன் அவ்விலையின் மூலத்தை அறியும்படி வந்து அப்பெண்ணைப் பார்த்து பரமசிவனையும் தரிசனஞ் செய்தான். ஆனால் அவரை லக்ஷ்யம் செய்யாது அஹங்காரம் மிக அடைந்தவனாகி இருந்ததால்

* தகப்பனது உத்தரவின்மேல் சென்றான் என்னும் வில்லி பாரதம்.

அவனைச் சபித்து முன் இவ்விதமே அகந்தைகொண்ட நால்வர் தேவர்களை அடைத்திருந்த பாதாளத்து குஹையுள் இவனையும் அடைத்தார். அவ்வைவரையே இப்பெண்ணிற்குக் கணவராகும்படி பரமசிவன் அருளியது. நீ கவலைப்படவேண்டாம். நான் உனக்கு ஞானக்கண் தருகிறேன். அவற்றின்மூலமாய் உண்மையறிவாய்" என்று சொல்ல* துருபதனும் ஞானநோக்கால் உண்மையறிந்து தேற்றமடைந்தான்.

தேற்றமடைந்த அரசன் பலவாறு ஊரை அலங்கரித்து விதிமுறைப்படி ஒன்றும் தவறாது, செய்ய வேண்டியவை எல்லாஞ் செய்து, வியாஸரிட்ட ஆஞ்ஞையைத் தலைமேற்கொண்டு, த்ரௌபதியை ஒவ்வொருநாள் ஒவ்வொருவருக்கு மணஞ் செய்விக்க என்ன என்ன செய்யவேண்டுமோ அவையெல்லாம் செய்தான். தௌமிய முனிவரும், வ்யாஸரருளால் ப்ராஹ்மணவடிவம் நீங்கிய பாண்டவர்க்கு முறையே தருமன் முதல் ஸஹதேவன் ஈறாக உள்ள ஐவர்க்கு, அக்நிஸாட்சியாக, ஒவ்வொரு நாளாக அக்நியில் தோன்றிவந்த க்ருஷ்ணை என்னும் த்ரௌபதியை அவர் கையுள் கைவத்து தானஞ் செய்யும்படியாக துருபதனை செய்வித்தனர். அக்காலத்து "இம்மணமே மேலோர் பெருமைக்கும் கீழோர் அழிவிற்கு மூலாதார"மென்ற ஓர் மொழி அங்கு த்வனித்தாற்போலிருந்தது. அக்காலத்து அங்கு வந்து இருந்த க்ருஷ்ணபலராமரும் தாம் செய்ய வேண்டிய சீர் யாவுஞ் சிறக்கச் செய்தனர். த்ரௌபதையும் பஞ்சமாங்கல்யத்தோடு பாண்டவர்க்கு பெருமையுண்டாக்க வந்த விஜயலக்ஷ்மி போல் விளங்கினள்.

* த்ரௌபதையின் முற்பிறப்பு வில்லிபாரதத்தில் வேறுவிதமாயுள்ளது. "நளாயினி என்பவள் மௌத்கல்யரைமணந்து, அவர் தன்னை பலவாறு பரீக்ஷிக்க அவற்றிலெல்லாம் தான் கற்பு நீங்காதிருந்து அவர் மனத்திலானந்தமூட்டி அவரால் எப்பிறப்பிலும் அவரைவிட்டு நீங்காத வாழ்வை அடையப்பெற்றாள். பின் அவர் பலபிறப்பிலும் வாழ்வடைந்துவர, அந்நளாயினி இந்த்ரஸேனை எனப் பிறவிகொண்டபோது முனிவன் இல்லறவாழ்க்கையை வெறுத்து தவத்திற்குச் செல்ல, இந்த்ரஸேனை பிரிவால் துயரமடைந்து பரமசிவத்தைக் குறித்துத் தவஞ்செய்ய அவரருளால், அகந்தையால் மேற்கூறியவாறு பிலத்திலடைக்கப்பட்ட ஐவருக்கு மனைவியாகும்படி வரமளிக்கப்பட்டாள்" என்பது வில்லிபுத்தூரார் பாரதம்: துரௌபதி மாலையிட்ட சருக்கம்.

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

டில்லி சிறைக்கல்விச்சாலையை யொட்டி ஒரு விவசாயப் பண்ணை.—இத் தென்னிந்தியாவுக்குச் செங்கற்பட்டில் ஒரு சிறைக்கல்விச்சாலை ஏற்பட்டிருப்பதுபோல மற்ற மாகாணங்களுக்கும் சிறைக் கல்விச் சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. பஞ்சாப் மாகாணத்துக்கு டில்லியில் ஒரு சிறைக்கல்விச்சாலை ஏற்பட்டிருக்கிறது. அக்கல்விச்சாலையில் வாசிக்கும் தண்டனைப்பட்ட சிறுவர்களுக்கு விவசாயத் தொழில் பரிச்சியமிருப்பது நலமாகுமென்று கருதி அவ்வூரில் ஒரு விவசாயப்பண்ணை ஏற்படுத்தப் போகிறார்களென்று தெரிகிறது. சிறைக்கல்விச் சாலைகளுக்கு அனுப்பப்படும் சிறுவர்கள் சிறைவாசம் நீங்கிய பின்பு மானமாயும் மரியாதையாயும் ஜீவனம் செய்வது சாத்தியமாகும்படி அவர்களுக்கு வேறு தொழில்கள் கற்றுக்கொடுப்பதோடு விவசாயத் தொழிலிலும் அவர்களுக்குத் தேர்ச்சி யுண்டாகும்படிச் செய்வது மெச்சத் தக்கதே யாகும் ஆதலால் சிறைக் கல்விச்சாலையை யொட்டி ஒரு விவசாயப் பண்ணை ஸ்தாபிக்கப்படப் போவதை நாம் சிலாகிக்கின்றோம்.

***

மெழுகுவர்த்தி.—பல வகையான கொழுப்புக்களை யுபயோகித்து வர்த்திகள் செய்கிறார்கள். திமிங்கிலத்தின் தலையிலுள்ள கொழுப்பைக் கொண்டு செய்யும் வர்த்தி உயர்தரமானது. பன்றி, ஆடு முதலியவைகளின் கொழுப்பைக் கொண்டு செய்வது மட்டமானது; மெழுகுவர்த்தியிலிருக்கும் நூல்வர்த்தியைப் பின்னியிருப்பதனால் அது எரியும்பொழுது வளைகின்றது. எண்ணெய் விளக்குகளின் வர்த்தியைப்போல் அடிக்கடி அதைத் தூண்டிக்கொடுக்க வேண்டியதில்லை. அந்த வர்த்தியைச் செய்தவுடன் வெண்காரநீரில் தோய்த்துக் காயவைக்கிறார்கள்; இதனால், அது சாம்பல் தட்டாமல் எரிகின்றது.

***

தம்பலப் பூச்சி.—இது அமெரிக்காக் கண்டத்திலுள்ள மெக்ஸிகோதேசத்திலும் சில தீவுகளிலுமிருக்கிற சிலவிதமான கள்ளிச்செடிகளின் மீதிருக்கும் ஒரு பூச்சி. அதைக் காயவைத்துப் பொடிசெய்து தண்ணீரிற் கலந்தால் நல்ல சிவப்புச் சாயமாகின்றது.

***

தென்னிந்தியாவில் தற்கொலை.—நம் தென்னிந்தியாவின் மரணக் கணக்கு ஜாப்தாவைப் பார்த்ததில், தற்கொலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருவதாகத் தெரியவருகிறது.

1897-ம் வருஷ முதல் 1906-ம் வருஷம் வரையில் உண்டான தற்கொலைகளின் கணக்கு பின் வருமாறு:—

வருஷம்	தற்கொலை	வருஷம்	தற்கொலை
1897	1791	1903	2187
1898	1901	1904	2203
1899	1937	1905	2169
1901	2006	1906	2202

மேற்கூறிய வருஷங்களில் நடந்தேறிய தற்கொலைகளுக்கும், கொலைகளுக்கும் உள்ள தாரதம்மியத்தைப் பற்றிக் கவனிக்க, சாதாரணமாகக் கொலைகளைக் காட்டிலும் தற்கொலைகள் நாலு மடங்கு அதிகமாகவே யிருந்துகொண்டு வருகின்றன. மேலும் தற்கொலை செய்துகொள்பவர்களில் பெரும்பான்மையோர் இந்துக்களென்றே தெரியவருகிறது. இவ்விந்துக்களிலும், பெரும்பாலும் ஸ்திரீகளே, இவ்வாறு உயிரை மாய்த்துக்கொள்கிறார்கள்.

இந்து ஸ்திரீகளின் பரிதபிக்கத்தக்க நிலைமையே இதற்குக் காரணமென்றும், பாலிய விவாகமும், சிறு பெண்களை வயோதிகர்களுக்குக் கலியாணம் செய்வித்து அவர்கள் சுகத்தைக் கெடுத்து விடுவதுமே முக்கியகாரணங்களாகச் சொல்லலாம் என்றும், 'மதாராஸ் மெயில்' பத்திரிகைக்கு 'கேசரி' என்ற கையொப்பமிட்டு ஒரு நிருபர் எழுதுகிறார்.

***

மணிலாப்பயிர் வெட்டுங்காலம்.—மோரிசுமணிலாப்பயிரையும், வினிகல் பயிரையும் பூமியில் விதைத்து அவசரப்பட்ட பலபெயர்கள் இது நாலு மாதத்துப் பயிர்தானே யென்று நாலாவது மாதக் கடைசியில் வெட்டத்துவக்குவது பிசகென்பதும், அப்படி வெட்டுவதனால் பாதிபலன் சவளையாயும், பிஞ்சாயுமாகிப் போய்விடுமென்றும், பின்னும் இரண்டுமாதம் நீர்பாய்ச்சிப் பொறுத்து வெட்டினால் ராசிஜாஸ்திகாணுமென்பதும் ஒரு மிகுந்த அநுபோகமுள்ள விவசாயியின் அபிப்பிராயம். இதை மணிலாப் பயிர் செய்யும் விவசாயிகள் கவனிக்கவேண்டும்.

***

கரும்புக் காடி.—இது நெல்லூர் ஜில்லாவில் ஒங்கோல் பட்டணத்தில் நவைத்ரீஸ் என்று சொல்லப்பட்ட ஒரு ஜாதித் துருக்கர்களால் செய்யப்படுகிறதாம். இவர்கள் கரும்பிலிருந்து செய்யப்பட்ட வெல்லத்தை எடுத்து அதோடு ஏழு அல்லது எட்டுப்பங்கு ஜலத்தை விடுகிறார்கள். இதில் காடியின் மேல் ஆடையைக் கொஞ்சம் போடுகிறார்கள். இந்த மாதிரி ஆடையைக் காடி செய்யும் ஒவ்வொரு வீட்டிலும் எடுத்து வைத்திருக்கிறார்களாம். இப்படி உறை (பிரை) குத்தின வெல்லத்தண்ணீரை ஒரு பானையில் போட்டு வாயை இறுகக்கட்டி 40 நாளைக்கு வெயிலில் வைத்துவிடுகிறார்களாம். இப்படிச் செய்தால் வெல்லத்தண்ணீர் காடியாகிவிடுகிறது.

ஆட்டுப்பால் கறப்பது.—பால் கறப்பதில் கூட சாமர்த்தியமிருக்கிறது. சில ஆடுகளின் முலைகையில் பிடித்துக்கறப்பதற்குச் சௌகரியமாயிருக்கும். சில கையில் பிடிக்கவராது. பாலை ஒவ்வொரு தடவையும் கறக்கும்போது ஒட்டக்கறந்து விடுவது நலம். ஏனென்றால் பால் ஒருதடவை கொஞ்சம் தங்கி நின்றால் அடுத்ததடவைகறக்கும்பொழுது பாலின் அளவு குறையும். இப்படி அடிக்கடி மடியில் பால்தங்கினால் சீக்கிரத்தில் ஆடு மறுத்துப்போம். பாலை இரண்டு கைகளாலும் மாற்றி மாற்றிக் கறக்க வேணும். கட்டைவிரல் முதல் நுனிவிரல்வரையிலுள்ள ஒவ்வொரு விரலும் ஒன்றின்பின் ஒன்றாய் ஒரே விதமாய் அதுக்கிக்கடைசியில் முலைக்காம்பை இழுத்துப் பாலைப் பீச்சவேணும். பால் நின்று விட்டால் மடியைக் கன்று முட்டுவதுபோல் கையால் தட்டி பாலைக் கறக்கவேண்டும். இப்படிச் செய்தால் சாதாரணமாய்க் கறப்பதைவிட கொஞ்சம் அதிகமாய் பால் அகப்படும்.

***

பழங்களை டப்பி முதலிய பாத்திரங்களில் போட்டு வைத்தல்.—ஐரோப்பா கண்டத்திலுள்ள இடலி தேசத்தில் வெஸூவியஸ் என்பதாக ஒருஎரிமலை இருக்கிறது. அது 1830-ம் வருஷத்துக்கு முந்தி ஒருதடவை வெடித்தது. அதனால் அதற்குப் பக்கத்திலுள்ள பாம்பீ என்னும் பட்டணம் நாசமாகி இடிந்து விழுந்து போய்விட்டது. சுமார் 100 வருஷங்களாக இடிந்து விழுந்த பட்டணத்தை அனேகம்பேர்கள் வெட்டிப்பார்த்து வருகிறார்கள். இப்படி ஒருதடவை சில அமெரிக்கர்கள் வெட்டும்பொழுது ஒரு வீட்டில் ஒரு அறையில் சில ஜாடிகளில் அத்திப்பழங்க ளிருந்தன. ஜாடியைத் திறந்து பார்த்ததில் அதிலுள்ள பழங்கள் ஆரோக்கிய மாயும் நன்றாயுமிருந்தனவாம். இதிலிருந்து சூட்சுமத்தை அறிந்துகொண்டு மறு வருஷம் முதல் அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் உள்ளவர்கள் பழங்களை டப்பி, ஜாடிமுதலிய பாத்திரங்களில் போட்டு வெளிதேசங்களுக்கு அனுப்பி வியாபாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

***

எலும்பு.—இதனைக் கடைசற்பிடித்துக் குமிழ்கள், கைப்பிடிகள், 'பொத்தான்' முதலிய சாமான்கள் செய்யலாம். இதனைத் தீயிற்சுட்டால் எலும்புக் கரியாகும். எலும்புக்கரியானது சர்க்கரையைச் சுத்தப்படுத்துவதற்கு உபயோகப்படும்.

***

ஒரு ஏக்கருக்கு வேண்டிய ஜலம்.—நஞ்சைநிலத்துக்கு ஒரு தடவை தண்ணீர் பாய்ச்ச ஸாதாரணமாய் மூன்று அங்குல ஜலம் வேண்டும். அதாவது 68,000-காலன். ஒரு காலன் என்பது ஆறு புட்டி, அதாவது பட்டணம் படியால் மூன்று புட்டி.